விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk






சங்கு 23 வள்ளுவர் ஆண்டு 2052 மார்கழி 16 வெள்ளிக்கிழமை (31.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 012

சுகாதார தொழிற்சங்க உறுப்பினர்கள் யாழில் மாபெரும் கவனயீர்ப்பு

## யாழ்.போதனா உட்பட வடக்கின் பல வைத்தியசாலைகள் ஸ்தம்பிதம்



3ஆம் பக்கம் பார்க்க

## வருடாந்தம் சிகரெட் விலையை அதிகரிக்க
### வரி சூத்திரம் அறிமுகம்

(கொழும்பு)

வருடாந்தம் சிகரெட் விலையை அதிகரிப்பதற்காக வரி சூத்திரம் ஒன்று அறி 15

## நீதிபதி இளஞ்செழியன் வவுனியாவுக்கு மாற்றம்

(வவுனியா)

மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

வடக்கு - கிழக்கு மேல் நீதிமன்ற நீதிபதி 15

## மத்திய வங்கியால் 202 பில்லியன் ரூபாய் அச்சிடப்பட்டது

(கொழும்பு)

202 பில்லியன் ரூபாயை அச்சிடுவதற்கு இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த ஒக்ரோபர் 14ஆம் திகதியின் பின்னர் பணம் அச்சிடப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். 15

மோடிக்கான தமிழ்க் கட்சிகளின் வரைவு தொடர்பில்

# சம்பந்தன் - ஹக்கீம் இன்று முக்கிய பேச்சு

### மனோ எம்.பியும் பங்கேற்பார்

*(கொழும்பு)*

இந்தியப் பிரதமர் மோடிக்கு தமிழ்க் கட்சிகளால் அனுப்பி வைக்கப்படவுள்ள கடிதம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனுக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீமுக்கும் இடையில் முக்கிய சந்திப்பு ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

இச்சந்திப்பில் மனோ கணேசன் எம்.பியும் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(07ஆம் பக்கம் பார்க்க)



நயினாதீவில் மினி சூறாவளி

## 6 குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிப்பு



15

## கொரோனாவால் சாவகச்சேரியில் ஒருவர் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி - நுணாவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த 79 வயது முதியவர் ஒருவர் கொரோனா நோய்த் தொற்றுக் காரணமாக நேற்று முன்தினம் புதன் 15

## பொருட்களின் விலை உயர்வே ராஜபக்ஷக்களின் புத்தாண்டு பரிசு

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பையே அரசாங்கம் பொதுமக்களுக்கு புத்தாண்டு பரிசில்களாக வழங்குவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

தனமல்வில பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். 15

## கொரோனா 18 பேர் பலி

(கொழும்பு)

கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் 15

## இந்தியா எப்போதும் இலங்கையுடன்

### சீன வெளிவிவகார அமைச்சர் நாட்டுக்கு வரவுள்ள நிலையில் இந்திய உயர்ஸ்தானிகராலயம்

(கொழும்பு)

நெருங்கிய நண்பராகவும் அயலவராகவும் இந்தியா எப்போதும் இலங்கையுடன் இருக்கும் என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயம் தெரிவித்துள்ளது.

சீன வெளிவிவகார அமைச்சர் இலங்கை வரவுள்ள நிலையில் இந்திய உயர்ஸ்தானிகராலயம் இவ்வாறு தெரிவித்துள்ளது.

இந்த மாத முற்பகுதியில் புது டெல்லியில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய, இலங்கைக்கு நீண்டகால மற்றும் மத்தியகால ஒத்துழைப்புகள் கிடைக்கவுள்ள 15

பிரபாகரன் தற்போது இருந்தால்

## வடக்கு - கிழக்கை வழங்கிவிட்டு அரசு டொலர் கோரியிருக்கும்

### முன்னாள் அமைச்சர் விஜித் விஜயமுனி

(கொழும்பு)

பிரபாகரன் தற்போது இருந்திருந்தால் அரசாங்கம் அவரிடம் வடக்கு, கிழக்கு மாகாணங்களைக் கையளித்துவிட்டு அதற்குப் பதிலாக டொலர்களை வழங்குமாறு கோரியிருக்கும் என முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெயர் மாற்றம்

முதலி கோவில் றோட், முதலாம் ஒழுங்கை, கொக்குவில் மேற்கு, கொக்குவில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **பழனி யாண்டி சேபாலன்** ஆகிய நான் எனது பெயரை இன்று முதல் **பழனியாண்டி ஜெயபாலன்** என மாற்றிக் கொண்டு ள்ளேன் எனவும் இனிமேல் சகல ஆவணங்களிலும் எனது புதிய பெயரையே பயன்படுத்துவேன் எனவும் அவ்வாறே கையொப்பமிடுவேன் எனவும் இத்தால் இலங்கை சனநாயக குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருகின்றேன்.

**31.12.2021** (9325) **பழனியாண்டி ஜெயபாலன்**

# அடுத்த சில வாரங்கள் இலங்கைக்கு மிகவும் முக்கியமானவை

## சுகாதார தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் கொரோனா நிலைமையை தீர்மானிப்பதில் அடுத்த சில வாரங்கள் தீர்மானமிக்கதாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொற்று நோயியல் நிபுணர் வைத்தியர் சமித் கினிகே இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

எதிர்வரும் பண்டிகை காலங்களில் பொதுமக்கள் எவ்வாறு செயற்படுகிறார்கள் என்பது முக்கியமான விடயமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தற்போது கொரோனா நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலும் கொரோனா வைரஸ் பரவலில் இருந்து நாடு பாதுகாப்பாக உள்ளது என்பது இதன் அர்த்தமில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே, நாங்கள் இன்னமும் ஆபத்திலிருந்து மீளவில்லை என தெரிவித்த அவர், ஒமிக்ரோன் நாட்டிற்குள் நுழைவதை தடுக்க மாத்திரமே முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ம)

## மணமகன் தேவை

பிறப்பு : 1992 இந்து - பெண்
நட்சத்திரம் : சதயம் லக்/ குரு
இடம் : அரியாலை
தகைமை : தனியார் துறை வேலை
எதிர்பார்ப்பு : உள்நாடு OR வெளிநாடு

(9330)

தொடர்பு **076 020 5469**

## அறிவித்தல்

கொக்குவில் கஜன் மண்டபத்திற்கு அருகாமையில் இயங்கிவந்த ஆட்டிறைச்சிக் கடையின் உரிமையாளர் நல்லையா உதயகுமார் (பெரியதம்பி) 2022.01.01 அன்று கொக்குவில் சந்தைக்கு இடமாறவுள்ளார் என்பதனை அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் அறியத்தருகின்றார்.

(9319)

தொடர்புகளுக்கு **077 085 6479**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 01 . 06 . 1941

மறைவு 02 . 12 . 2021



கடந்த 02.12.2021 அன்று சிவபதமடைந்த மாவைகலட்டியைப் பிறப்பிடமாகவும் சன்னிதி கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட எங்கள் அன்புத் தெய்வம்

அமரர் **வள்ளிப்பிள்ளை ஆறுமுகம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (01.01.2022) சனிக்கிழமை காலை 7.00 மணியளவில் சன்னிதி கோவிலடி புனித தீர்த்தக் கரையிலும் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்று நண்பகல் 12.00 மணியளவில் அச்சுவேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம் (9334)

வல்லை வீதி, அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. 077 645 0772 குடும்பத்தினர்

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532

## கம்சப்பிரியா இசைக் கல்லூரி

இல.30, கிருஸ்ணபிள்ளை வீதி, ஈச்சமோட்டை யாழ்ப்பாணம்.

புதிய கல்வியாண்டிற்கான வகுப்பு ஆரம்பம்

சனிக்கிழமை 01.01.2022 மாலை 3 மணி - 4 மணி வரை

**கற்பிக்கப்படும் பாடங்கள்**

- வயலின்
- புல்லாங்குழல்
- கிட்டார்
- ஓர்கன்
- வீணை
- ஹார்மோனியம்
- வாய்ப்பாட்டு (கர்நாடக சங்கீதம்)

பழைய, புதிய மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். (9327) ஆசிரியர்

# 25 ஆவது பிறந்தநாள் நினைவலைகள்

## வெற்றிவேலு பிரசாந்தி

[ யா / மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை - க.பொ.த. உயர்தரம் (கணிதப் பிரிவு) - 2015 ]

தாயின் மடியில் : **31.12.1996** நோயின் பிடியில் : **31.08.2016**



எங்கள் செல்லமகளே - பிரசாந்தி
எமைவிட்டு பிரிந்து சென்றது ஏனோ!
இளையவளே உனக்கு இன்று
இருபத்தைந்தாவது அகவை நன்நாள்!!
பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல
பிரசாந்தியே உனை தேடுகின்றோம் - இங்கு

மொட்டு விரியுமுன்னே கண்முன்னே
உதிர்ந்து போனது உம் வாழ்வு
பள்ளிப் பருவமதை பாதியிலே பறித்து
விதிவடிவில் வந்த கொடியநோய்
விரைவாக உனதுயிரை பறித்ததுவோ!
விம்முகின்றோம் அந்நாளை எண்ணி...!

நித்திலத்தில் நீர் நினைவுடன் வாழ்ந்திடுவீர் - உனை
ஈன்றவர் பெருந்துயர் உளமெல்லாம் நனைகிறது
உடன் பிறந்தோர் உள்ளம் தீயெழுந்து வேகிறது
கனவில் கூட வந்து கதை பேசாயோ - பிரசாந்திக்குட்டி
பிரியமுடன் உனை அழைக்கின்றோம்.
ஓடோடி வந்திடம்மா எம்மனைக்கு...!

(9318)

**விண்ணுலகில் வாழும் எங்கள் கடைக்குட்டி செல்லத்திற்கு கண்ணீரில் நனைந்த பிறந்தநாள் வாழ்த்துக்கள்.**

" பிரசாந்தி வாசா "
எல்லை ஒழுங்கை,
தும்பளை, பருத்தித்துறை.

077 986 2521

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ ஆட்சியை கொண்டுவர பயன்படுத்திய ஆயுதமே ஞானசார தேரர்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

(யாழ்ப்பாணம்)

**நாட்டில் இராணுவ ஆட்சியை கொண்டு வருவதற்கு, கோட்டாபய பயன்படுத்திய ஆயுதமே ஞானசார தேரர் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஜனநாயகம் பேசினால் சிறையில் அடைக்கும் ஆட்சியின் கீழ் நாம் வாழ்கின்றோம்.

இராணுவ ஆட்சியை கொண்டு வருவதற்காக, சிறையில் இருந்த தேரரை கொண்டு வந்து தனது ஆயுதமாக கோட்டாபய பயன்படுத்தி வருகிறார்.

இராணுவத் தளபதிகளை அமைச்சின் செயலாளர்களாக அவர் நியமித்துள்ளார். கிட்டத்தட்ட 14 அமைச்சின் செயலாளர்கள் இராணுவத் தளபதிகள். அத்துடன் ஆளுநர், திணைக்கள தலைவர்களும் அவ்வாறே நியமிக்கப்பட்டுள்ளனர்.

புத்த பெருமானின் அவதாரமாக தன்னை காட்டிக்கொள்ளும் தேரர் இப்போது, ஒரே நாடு ஒரே சட்டம் என்ற புதிய அவதாரத்தை எடுத்துள்ளார்.

நாம் இப்போதும் இராணுவ ஆட்சியில் தான் உள்ளோம். இது தமிழ் மக்களுக்கு மட்டும் இடி அல்ல. சிங்கள மக்களுக்கும் இது ஆபத்தானது. ஏனென்றால் 1970 களில் கதிர்காமத்து அழகி மன்னம்பேரியை கொன்றவர்கள் இராணுவத்தினர்.

பிரேமதாச காலத்திலும் சுமார் 50 ஆயிரம் சிங்கள இளைஞர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதற்காக அப்போது பிரேமதாசவுக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ சர்வதேசம் வரை சென்றிருந்தார்.

ஆகவே, இராணுவத்துக்கு சிங்களம், தமிழ் என்ற வேறுபாடு இல்லை. துப்பாக்கி முனையில் அனைவரையும் கொல்வதே அவர்களின் நோக்கம்.

தமிழர்கள் முன்பும் இராணுவ ஆட்சியில் இருந்தார்கள். அதேபோல பொருளாதார ரீதியான பிரச்சினைகளை தமிழர்கள் எதிர்கொண்டு வாழ்ந்தவர்கள்.

எனவே தமிழர்களுக்கு இது புதிதல்ல. சிங்கள மக்கள் தற்போது துன்பத்தை உணர ஆரம்பித்துள்ளனர் என தெரிவித்தார். (நி-5)

## பால்தேநீர் விற்கப்பட மாட்டாது

(கொழும்பு)

பால்மாவின் விலை அதிகரிப்பு காரணமாக பால் தேநீர் விற்பனையை இடைநிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை உணவக உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒரு கோப்பை பால் தேநீரின் விலை 80 ரூபாவுக்கும் அதிகமாக அதிகரிக்கப்படவுள்ளதால், பால் தேநீரை விற்பனை செய்வதிலிருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

பால்மாவின் விலை அதிகரித்துள்ள இவ் வேளையில் மீண்டும் ஒரு கப் பால் தேநீரின் விலையை அதிகரித்தால் அதனை நுகர்வோர்களால் தாங்கிக்கொள்ள முடியாது என்பதற்காகவே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

## அனைத்து அரச ஊழியர்களையும் சேவைக்கு அழைக்க தீர்மானம்

(கொழும்பு)

அனைத்து அரச ஊழி யர்களையும் எதிர்வ ரும் 3 ஆம் திகதி முதல் சேவைக்கு அழைப் பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளது.

அரச சேவை, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்ன சிறி இந்த விடயத்தினைத் தெரிவித்தார்.

இது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப் படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத் தினால் வெளியிடப்பட் டுள்ள சுகாதார வழிகாட் டுதல்களுக்கு அமை வாகவே எதிர்வரும் 3ஆம் திகதி முதல் அரச சேவைகள் முழுமை யாக முன்னெடுக்கப்படும் என அறிவிக்கப்பட் டுள்ளது. (நி-5)

## இன்று முதல் பால்மா விலை அதிகரிப்பு

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை இன்று முதல் அதிகரிக்கப் படவுள்ளதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.

அதற்கமைய, 400 கிராம் பால்மா பொதியின் விலை 60 ரூபாவினாலும், ஒரு கிலோ கிராம் பால்மா பொதியின் விலை 150 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பால்மா பொதியொன்று 1,345 ரூபாவுக்கும், 400 கிராம் பொதியொன்று 540 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படும் எனப் பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது நாடு முழுவதும் பால்மாவிற்கு தட்டுப்பாடு நிலவி வருகிறது. எனினும் விலைகள் அதிகரிப்பின் பின்னர் பால்மா தட்டுப்பாடின்றிக் கிடைக்கும் என பால்மா இறக்குமதியாளர் சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5)

# சுகாதார தொழிற்சங்க உறுப்பினர்கள் யாழில் கவனயீர்ப்பு பேரணி




(யாழ்ப்பாணம்)

சுகாதார தொழிற்சங்க கூட்டமைப்புடன் இணைந்து நாடு தழுவிய ரீதியில் மாகாண ரீதியாக நடத்தப்படும் தொழிற்சங்க நடவடிக்கை நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

அந்த வகையில் நேற்றுக்காலை வடமாகாணம் முழுவதும் உள்ள சுகாதார தொழிற் சங்க உறுப்பினர்கள் கவனயீர்ப்புப் பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது போராட்டத்தில் [illegible] பட்டவர்களால் சுகாதாரத் துறையை அழிக்காதே, சுகாதார நிர்வாக சேவையை ஆரம்பி, விசேட கொடுப்பனவை உயர்த்து, பொதுமக்களின் ஆரோக்கியத்தில் கவனம் எடு, பதவி உயர்வு முரண்பாட்டைத் தீர்த்து வை, பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக முகக் கவசங்களை வழங்கு, போன்ற கோஷங்கள் எழுப்பப்பட்டது.

போராட்டம் காரணமாக யாழ். நகரப் பகுதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது. (4-5-18-33-104)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### கிரிக்கெட் சுற்றுப் போட்டி லயன்ஸ் கழகங்களுக்கிடையிலான

# புலோலி வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழக அணி சம்பியன்



லயன்ஸ் கழகங்களுக்கு இடையில் வடமாகாண ரீதியில் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் புலோலி வடமராட்சி கிழக்கு லயன்ஸ் கழக அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் புலோலி வடமராட்சி கிழக்கு லயன் அணியை எதிர்த்து சாவகச்சேரி லயன் அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தா டிய சாவகச்சேரி லயன்ஸ் அணியினர், புலோலி வடமராட்சி கிழக்கு லயன் அணியினரின் பந்து வீச்சிற்கு முகம் கொடுக்க முடியாமல் திணறினர்.

இதனால் சாவகச்சேரி லயன் அணியினர் 5 ஓவர்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து 36 ஓட்டங்களை மட்டுமே பெற்றனர்.

அதிகபட்சமாக தர்சன் 16 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அஜந்தன் 2, நீலன், ஸ்ரீராம் மற்றும் பிரதாபன் தலா ஒவ்வொரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய புலோலி வடமராட்சி கிழக்கு லயன்ஸ் அணி வீரர்கள் பிரதாபன் மற்றும் நவதீபன் ஆகியோரின் இணைப் பாட்டத்தில் விக்கெட் இழப்பின்றி 2.3 ஓவர்களில் வெற்றியிலக்கை அடைந்தனர்.

அவ்வணி சார்பாக பிரதாபன் 21 ஓட்டங்களையும் நவதீபன் 11 ஓட்டங்களை பெற்றனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக பிரதாபனும் சிறந்த பந்து வீச்சாளராக அஜந்தனும் சிறந்த துடுப்பாட்ட வீரனாக தர்சனும் தெரிவு செய்யப்பட்டனர்.(4-90)

## வாலையம்மன் ச.ச. நிலைய புதிய நிர்வாக சபை தெரிவு



திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமுக நிலையத்திற்கான புதிய நிர்வாக சபையானது 2015 ஆம் ஆண்டின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை யா/ செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப.மயூரனின் தலைமையில் நடைபெற்றது.

நடைபெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் புதிய நிர்வாகம் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டது.

இதில் தலைவராக நிர்மலானந்தன், செயலாளராக ஸ்ரீசந்திரகுமார், பொருளாளராக சிவதர்சன், உப தலைவராக வேதகிரீஸ்வரன், உப செயலாளராக தர்சனன், நிர்வாக சபை உறுப்பினர்களாக திருமதி. இராஜபூங்குழலி, திருமதி. எட்மன்யூடித், நாகேந்திரம், செந்தூரன், கஜநீதன், நந்தகுமார் ஆகியோரும் போசகர்களாக இ.ரவீந்திரன், நா.ரகுமார் ஆகியோரும் கணக்காய்வாளராக வ.ஸ்ரீதரன் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். மேலும் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டதையடுத்து வெள்ளைப்பிள்ளையார் ஆலயத்தில் இன்று மதியம் அன்னதானம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு புதிய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம)

## கரப்பந்தாட்ட இறுதியாட்டம்


யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் யாழ். மாவட்ட லீக் அணிகளுக் கிடையிலான கரப்பந்தாட்ட தொடரின் இறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெறவுள்ளது.

மின்னொளியில் நடை பெறவுள்ள இறுதியாட்டத்தில் ஆவரங்கால் ஏ.கே.எவ். அணியை எதிர்த்து அரி யாலை கில்லாடி அணியும் மோதவுள்ளது. (4-90)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2482

**தனேஸ்**

சங்கு சக்கரம் போல் தான் வாழ்க்கை



ஓடினால் சக்கரம் ஓய்ந்தால் சங்கு...

**அர்ஜுன்**

மச்சான் இந்த வருஷம் விட்டா உன்ன அடுத்த வருஷம் தான்டா பாக்க முடியும்...




இந்தா வந்துட்டான் இந்த ஜோக்கை தூக்கிட்டு வருசா வருசம்...

**விவேக்**


இவ்வளவு அடி வாங்கியும் நியூ இயர் செலிபிரேசனுக்கு பிளான் போடுறியே




எவ்வளவு திமிரு இருக்கனும் உனக்கு!


**துளசிகா**

காதலனை ரசிக்கும் காதலியை விட... கணவனை ரசிக்கும்....மனைவி தான் அழகு...




நமக்கு காதலியும் அமையல, மனைவியும் அமையல... நம்ம தல விதி...

**நதீசா**




இதில நான் திருடனா இருந்து... பொலிஸ் கிட்ட இருந்து தப்பிக்க நான் போட்ட நடிப்பு இருக்கே...

**குறிஞ்சிநிலா**

2021 முடியப் போகுது ...இந்த ஒரு வருஷமா என்னத்த கிழிச்சோம்னு யோசிச்சுப் பார்த்தா....

கலண்டர் திகதிய தவிர வேற ஒண்ணுமில்ல!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

31.12.2021
மார்கழி 16, வெள்ளிக்கிழமை
துவாதசி காலை 7.46 மணிவரை
திரயோதசி பின்னிரவு 5.27 மணிவரை
அனுசம் முன்னிரவு 8.08 மணிவரை
சுபநேரம் 6.29- 7.59 மணிவரை
இராகுகாலம் 10.59-12.29 மணிவரை
சந்திராஷ்டமம்: அச்சுவினி, பரணி
- பிரதோச விரதம்

வளவன்


மேஷம்

கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம் புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.


ரிஷபம்

செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


மிதுனம்

வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், உடல் நலம் சீராகும், வீட்டைப் பராமரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.


கடகம்

பெற்றோர் மீதான பாசம் கூடும், மன திற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு உடல் நலன் சீராகும்.


சிம்மம்

சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.


கன்னி

எடுத்த காரியங்களை எளிதில் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் அகலும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.


துலாம்

புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், எதிர்பாராத தன வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், வாக்கு மேன்மையுண்டு.


விருச்சிகம்

குடும்பத்தினர் உங்கள் குணமடைந்து நடந்து கொள்வர், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


தனுசு

திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தேவையற்ற சஞ்சலங்களைத் தவிர்ப்பது நல்லது, வழிபாடு மகத்துவம் தரும்.


மகரம்

வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


கும்பம்

எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் கைகூடும், பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு.


மீனம்

அன்பால் சாதித்துக் காட்டும் நாள், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், விருப்பங்கள் நிறைவேற கணபதியை வழிபட வேண்டிய நாள்.

எதைத்தேடி நாம் அலைகிறோமோ அது நமக்குள்ளே இருக்கிறது

## மீண்டும் மூடப்படவுள்ள எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம்

(கொழும்பு)

சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம் எதிர்வரும் 3 ஆம் திகதி மீண்டும் மூடப்படும் என எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி மீளத் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# மரண அறிவித்தல்

## திருமதி. இராசையா தவமணி



துன்னாலை தெற்கை பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கு, புத்தூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசையா தவமணி அவர்கள் 29.12.2021 அன்று காலமானார்.

அன்னார் இராசையாவின் பாசமிகு மனைவியும் ,பிரேமலதா, பிரபாகரன், பிரதீபன், தயாளன் ஆகியோரின் அன்புத் தாயாரும், குகதாசன், துஷாயினி, லோஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சங்கவி, ஜெகதாரன் ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக புத்தூர் கிழக்கு அந்திரானை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு, புத்தூர். (9328)

தகவல்:
குடும்பத்தினர்

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம்-07 சென். செபஸ்தியான் வீதி ஆதன இல 32/ 6A என்ற இலக்கத்தை உடைய ஆதனமானது தேவசகாயம் பெண் மதினா மற்றும் ஞானப்பிரகாசம் இறப்பியல் பெண் மரியா என்ற பெயரில் யாழ்ப்பாணம் மாநகரசபை ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

கபரியேல் ஞானப்பிரகாசம் தேவதாசன் என்பவர் 07.01.2005 திகதியில் பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் தவநேசன் முகதாவில் 8883 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனத்தின் உரித்தாளராக தன்னை வெளிப்படுத்தியுள்ளார்.

அதன்பின்னர் மேற்குறித்த கபரியேல் ஞானப்பிரகாசம் தேவதாசன் என்பவர் 26.03.2008 திகதியில் பிரசித்த நொத்தாரிசு சஞ்சை தவநேசன் முகதாவில் 283 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் குறித்த ஆதனத்தை செபஸ்தியாம்பிள்ளை மறுபெயர் பெனிப்பஸ் சிலுவைதாஸ்க்கும் பெண் கிறிஸ்ரீனாவுக்கும் அறுதியாக விற்றுள்ளார்.

பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 03.09.2011ம் திகதியில் 283ம் இலக்க உறுதி மூலம் செபஸ்தியாம்பிள்ளை மறுபெயர் பொனிப்பாஸ் சிலுவைதாசும் பெண் கிறிஸ்ரினாவும் தங்கள் சீவிய உரித்துக்கு அமைவாக தனது மகள் அன்று பெண் கனிஸ்ரா கமலினி என்பவருக்கு குறித்த ஆதனத்தை நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

பிரசித்த நொத்தாரிசு முடியப்பு றெமிடியஸ் முகதாவில் 09.07.2018ம் திகதியில் 2034ம் இலக்க உறுதி மூலம் அந்தோனிப்பிள்ளை அன்றூவும் பெண் கனிஸ்ரா கமலினியும் சிலுவைதாஸ் உம் குறித்த ஆதனத்தை றெஜின் லெயோன்ஸ் என்பவருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள்.

ஆதன அட்டவணை:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று பாசையூர் இறை பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் கிராமசேவையாளர் பிரிவு J/65 யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட "விளாங்குளம் வயல்" குளி பத்து தசம் ஒன்பது ஏழு (10.97) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் P. தனராஜா அவர்களால் 2004/02/10ம் திகதி அளந்து வரைந்த 2483ம் இலக்கப் படத்தில் துண்டு-1 எனக் காட்டப்பட்டுள்ளது. இதற்கு எல்லைகள்.

கிழக்கு: 2ம் குறுக்குத்தெரு
வடக்கு: செபஸ்தியாம்பிள்ளை யோன்கெனடியின் ஆதனம்
மேற்கு: தேவசகாயம் பெண் நதீனாவின் ஆதனம்
தெற்கு: 6 அடிப்பாதை இதடங்கலும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது சிலுவைதாஸ் றெஜின் லெயோன்ஸ் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது ஆதனவரி பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு/ முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது சிலுவைதாஸ் றெஜின் லெயோன்ஸ் என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

விஸ்வலிங்கம் மணிவண்ணன்,
கௌரவ முதல்வர்,
மாநகர சபை, யாழ்ப்பாணம். (C-3380)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆயிரம் தாதிய உத்தியோகத்தர்கள் பதவி உயர்வை இழக்கும் நிலை

## தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத் தலைவர் சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்)**

**13 ஆயிரம் தாதிய உத்தியோகத்தர்கள் பதவி உயர்வினை இழக்கின்ற நிலை ஏற்படுகின்றது. அதற்காகவே நாடளாவிய ரீதியாக போராட்டங்கள் இடம்பெறுகின்றன என அரசதாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தலைவர் சமன் இரத்தினபுரி தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது போராட்டத்தின் கோரிக்கைகளுக்கு இதுவரை சுகாதார அமைச்சு செவிசாய்க்கவில்லை.

சுகாதார அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட ரணக்கே சம்பள ஆணைக்குழுவில் 2010 ஆம் ஆண்டு இணைக்கப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்த வேண்டும். மேலதிக நேரக்கொடுப்பனவினை அதிகரிக்க வேண்டும், விசேட கொடுப்பனவினை அதிகரிக்க வேண்டும்.

பதவிநிலை சுற்றுநிருபம் பொது நிர்வாக அலுவலகள் அமைச்சினால் வழங்கப்பட்ட போதிலும் அதன் காரணமாக சுகாதார அமைச்சு அதற்காக சுற்றுநிருபத்தினை வெளியிடவில்லை, சுகாதார அமைச்சர் இராணுவத்திற்கு அல்ல அவர் பொதுமக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும். இதனால் எமது கோரிக்கைகளுக்கான நிவாரணங்களைப் பெற்றுத் தரும் வரை எமது போராட்டம் அரசுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் என தெரிவித்தார். (4-5-33)

# பண்டத்தரிப்பு மருத்துவமனை தரமுயர்த்தப்பட வேண்டும்

## சிறீதரன் எம்.பி.வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையை தரம் உயர்த்தினால் அப்பகுதி மக்கள் மருத்துவ சேவையை பெற தூர இடங்களுக்கு செல்வதைத் தவிர்க்கலாம் என பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

பண்டத்தரிப்பு பிரதேச மருத்துமனைக்கு நேற்று முன்தினம் விஜயம் செய்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பண்டத்தரிப்பு பிரதேச மருத்துவமனையில் மாதாந்தம் 3500 இற்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அடிப்படை வசதிகள் இருந்தும் ஆளணி பற்றாக்குறை காரணமாக விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற முடியாத நிலைமை காணப்படுகிறது.

இம் மருத்துவமனையை தரம் II இல் இருந்து தரம் I இற்கு மாற்றப்பட வேண்டும் என பொதுமக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். இவர்கள் மருத்துவ சேவைகளை பெறுவதற்காக அதிக தூரம் பயணித்து யாழ்.போதனா மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலையுள்ளது. அருகிலேயுள்ள இந்த மருத்துவமனை தரம் உயர்த்தப்பட்டு ஆளணிப்பற்றாக்குறையையும் நீக்கினால் இப் பகுதி மக்கள் இங்கேயே சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என தெரிவித்தார். (4-5-33)

# மணிவிழாவும் 'தவதீபம்' மலர் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

வாதரவத்தை விக்னேஸ்வர வித்தியாலய அதிபர் ஜோசேப்பு அன்ரனி தவநாயகத்தின் மணி விழா நிகழ்வும் 'தவதீபம்' மலர் வெளியீடும் நாளை 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் தலைமையுரையை மணிவிழா குழு தலைவர் க.திருமாலழகனும் வரவேற்புரையை மன்/சின்ன வலயன்கட்டு அ.த.க. பாடசாலை அதிபரும் மணிவிழா குழு உபதலைவருமான சி.பத்மதாசனும் அருளாசியுரையை வாதரத்தை கேதுவுப் பிள்ளையார் கோயில் பிரதம குரு சிவஸ்ரீ சாமி சோமசுந்தரக் குருக்களும் வழங்கவுள்ளனர்.

பழைய மாணவர் (சுவிஸ்) பா.கணேசலிங்கம் மலர் வெளியீட்டையும் மலராசியர் கு.துஷ்யந்தன் மலர் வெளியீட்டுரையையும் மலர் நயப்புரையை எஸ்.கே.கிருபாகரனும் நன்றியுரையை யாழ்.பல்கலைக்கழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் நா.பிரதீபராஜாவும் வழங்கவுள்ளனர்.(4-5)



யாழ்ப்பாணம் தென்னைப் பயிர்ச்செய்கைச் சபை ஓய்வு நிலை உதவிப் பிராந்திய முகாமையாளர் ஜெ.சந்தியேந்திரனின் மணிவிழாவும் 'தென்னைகளுக்கிடையில் ஊடு பயிராக கமுகு செய்கை' என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வும் கடந்த 26 ஆம் திகதி நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் இடம்பெற்றது.

# அரசிற்கு துணை போகாது நீதியை நிலை நாட்டுங்கள்

## சர்வதேசத்திடம் உறவுகள் கோரிக்கை

(நெளுக்குளம்)

சர்வதேச சமூகம் இலங்கை அரசுக்கு துணை போகாமல் எமக்கான நீதியினை வழங்க முன்வரவேண்டும் என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா பழைய பேருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்கள், எமக்கான நீதி கிடைக்காத நிலையில் 12 வருடங்களாக தொடர்ச்சியாக நாம் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம். பெறுமதி மிக்க எமது உயிர்களை தொலைத்துவிட்டு நாம் வீதி வீதியாக போராடிக்கொண்டிருக்கிறோம்.

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட பிள்ளைகளையே நாம் கோரி நிற்கின்றோம். இழப்பீட்டையோ வாழ்வாதாரத்தையோ கேட்டு நாம் போராடவில்லை.

சர்வதேச சமூகம் எமக்கான நீதியினை வழங்காமல் இலங்கை அரசுக்கு துணை போகின்றதா? என்ற சந்தேகம் எமக்கு எழுகிறது. எனவே நீங்கள் கண் மூடியிருக்காமல் எமது நிலை கருதி சாட்சிகளான நாங்கள் இருக்கும் போதே எமக்கான நீதி கிடைப்பதற்குரிய பொறிமுறைகளை சர்வதேச சமூகம் ஏற்படுத்த வேண்டும் என தெரிவித்தனர். (4-5-299)

# ஜனவரி 4 முதல் 6 வரை விசேட நுளம்பு கட்டுப்பாட்டு வாரம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு நுளம்பு கட்டுப்பாட்டு வாரம் எதிர்வரும் 2022 ஜனவரி 4 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது என யாழ்.மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி அறிவித்துள்ளார்.

டெங்கு நுளம்பு பெருகக்கூடிய சூழலை அகற்றி டெங்கு தாக்கத்திலிருந்து பாதுகாக்கு முகமாக தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். இதன் மூலமே அதிகரித்து வரும் டெங்கு நோய்த்தாக்கத்திலிருந்து விடுபட முடியும்.

பொதுமக்கள் தமது வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் மற்றும் பொதுச் சந்தைகள், மயானங்களின் சுற்றுச்சூழலை துப்புரவாகப் பேண வேண்டும்.

இம்முறை டெங்கு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச,தனியார் நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள், வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாதவாறு சுத்தமாக வைத்திருப்புதுடன் வீடுகளிற்கு களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி கேட்டுக் கொண்டுள்ளார். (4-5)

# திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினரால் ஆண்டு தோறும் நடத்தப்படும் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை 1 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறும் என சைவ பரிபாலன சபை செயலாளர் இரா.செல்வவடிவேல் அறிவித்துள்ளார். (4-5)

# கசிப்புடன் பெண் கைது

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட பெண் ஒருவரை நெல்லியடி பொலிஸார் கைது செய்தனர்.

நேற்று அதிகாலை நெல்லியடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரவின் உத்தரவில் துன்னாலை கிழக்கு பகுதியில் தேடுதல் நடவடிக்கை மேற்கொண்ட போது, துன்னாலை கிழக்கு பறையன்குளம் பகுதியில் 100 லீற்றர் கோடாவும், 2 லீற்றர் கசிப்பும் மீட்கப்பட்டதுடன் 31 வயதுடைய பெண் ஒருவரையும் நெல்லியடி பொலிஸார் கைது செய்தனர். (4-5-60)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது



(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி-நுணாவில் பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை ஒரு கிலோவிற்கும் மேற்பட்ட கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் வழிகாட்டுதலில் உப பொலிஸ் பரிசோதகர்களான பண்டார மற்றும் நினாஸ் ஆகியோர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

கைதான நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-5-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாப் எரிவாயு சிலிண்டர்களை மீளக் கையளிக்குமாறு அறிவிப்பு

(கொழும்பு)

டிசெம்பர் 05 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்பட்டு இதுவரை எரிவாயு நிறைவடையாத சிலிண்டர்களை மீள கையேற்பதற்கு லாப் எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளது.


பச்சை நிற சீல் அகற்றப்பட்டாலும் எரிவாயு சிலிண்டர்களை மீள வழங்குவதற்கு விருப்பமான நுகர்வோருக்கு இதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும் என லாப் எரிவாயு நிறுவனம் அறிவித்துள்ளது.

விற்பனை முகாமையாளர் அல்லது விநியோக பிரதிநிதிகளை சந்தித்து சிலிண்டர்களை கையளிக்க முடியும்.

எரிவாயு சிலிண்டர்களை மீள வழங்கும் போது, அதன் நிறைக்கமைய பணத்தை மீள செலுத்துமாறும் அல்லது அதற்கேற்ற புதிய சிலிண்டர்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக லாப் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது. (நி-5)

# சம்பந்தன்- ஹக்கீம் இன்று சந்திப்பு





(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கும் இடையில் முக்கியத்துவமிக்க சந்திப்பொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

இரா. சம்பந்தன், த.சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் கூட்டமைப்பின் சார்பிலும், ரவூப் ஹக்கீம் உள்ளிட்டவர்கள் மு.கா. சார்பிலும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தச் சந்திப்பில் மனோ கணேசனும் பங்கேற்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும், இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும், இதற்கான அழுத்தத்தை இலங்கை அரசுக்கு இந்தியா பிரயோகிக்க வேண்டும் எனக் கோரி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு கூட்டு ஆவணமொன்றை அனுப்பி வைப்பதற்கு தமிழ் பேசும் கட்சிகள் முயற்சித்தன. இதுவரை மூன்று சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றுள்ளன.

எனினும், சில அரசியல் காரணங்களால் கூட்டு ஆவணத்தில் கையொப்பமிட முஸ்லிம் கட்சிகள் இழுத்தடிப்பு செய்து வருகின்றன.

அக்கட்சிகளின் தலைவர்களுக்கு கடும் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இந் நிலையிலேயே இன்று ஹக்கீமை, சம்பந்தன் தரப்பு சந்திக்கவுள்ளது. (நி-5)

# கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ள 500 கொள்கலன்களில் அரிசி

(கொழும்பு)

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் அடங்கிய சுமார் 1,500 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அவற்றில் சுமார் 500 அரிசி கொள்கலன்கள் உள்ளதாக இறக்குமதியாளர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் நிஹால் செனவிரத்ன தெரிவித்தார்.

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொன்னி சம்பா, நாட்டரிசி மற்றும் பச்சரிசி போன்றவை அவற்றில் காணப்படுவதாகவும் அவற்றில் ஒரு சில கொள்கலன்களே இதுவரை விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# சமையல் எரிவாயு சிலிண்டர்களுக்கு புதிய வால்வு பொருத்த நடவடிக்கை

(கொழும்பு)

அனைத்து சமையல் எரிவாயு சிலிண்டர்களிலும் ஏற்கனவே உள்ள வால்வுகளை மாற்றி புதிய வால்வுகளை பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நுகர்வோர் பாதுகாப்பு அமைச்சர் லசந்த அழகியவன்னவுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் சமையல் எரிவாயு நிறுவனங்கள் இதனைத் தெரிவித்துள்ளன.

சமையல் எரிவாயு சிலிண்டர்களில் புதிய வால்வுகளைப் பொருத்தும் நடவடிக்கைகள் காரணமாகவே, தற்போது சந்தையில் சமையல் எரிவாயுவிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக எரிவாயு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (நி-5)


## கல்யாணமாலை

### சர்வதேச திருமண சேவை

#### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து உயரம்:5'9"
நட்சத்திரம்:திருவாதிரை 1
கி.பா:42 சூரி10 செவ் 1 இல்
தகைமை/தொழில்: வாகனம், கடை உரிமையாளர்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண்
தொ.இ: B/12081

பிறப்பு:1998 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 2 உயரம்: 5'4"
கி.பா:சூரி,செவ் 6 இல்
தகைமை/ தொழில்:நகைக்கடைசொந்தம்
எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண்
தொ.இ: B/12082

பிறப்பு:1987 இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி 4
கி.பா:39 ¼ செவ் 2 சூரி 1 இல்
உயரம்:5'8"
தகைமை/தொழில்: தனியார் கம்பனி மனேஜர். (10 வருடம்)
எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்
தொ.இ: B/12084

பிறப்பு:1991 இந்து நட்சத்திரம்: பூரம் 1
கி.பா: 16 சூரி,செவ் 5 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்:B.Sc (Colombo Uni) B.Eng, Work-TO.
எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண் (IT, BBA) உள்நாடு மட்டும்
தொ.இ: B/12085

#### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு:1992 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 2
கி.பா: செவ் 10 சூரி 2இல் உயரம்: 5'
தகைமை/தொழில்: வர்த்தகப் பிரிவு கல்வியியற் கல்லூரி ஆசிரியை
எதிர்பார்ப்பு: தகுதியான அரச, தனியார் தொழில்
தொ.இ:G/12288

பிறப்பு:1995 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா:10 செவ் 4 சூரி 3 இல் உயரம்:5'3"
தகைமை/தொழில்: ஆசிரியர் பயிற்சி கல்லூரி கோப்பாய் ஆங்கில ஆசிரியை
எதிர்பார்ப்பு: தகுதியான அரச, தனியார் உத்தியோகம்
தொ.இ:G/12290

பிறப்பு:1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை 2
கி.பா: சூரி8 செவ் 12இல் உயரம்:5'2"
தகைமை/தொழில்: BA பட்டதாரி யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு:வெளிநாடு லண்டன், உள்நாடு வைத்தியர், எஞ்சினியர்
தொ.இ:G/12300

பிறப்பு:1992 இந்து நட்சத்திரம்:ரோகிணி
கி.பா:- சூரி 7 செவ் 8 இல்
தகைமை/தொழில்: அலங்காரம் (மேக்கப்)
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: G/7074

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.



## பதவி வெற்றிடம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- **கணனி தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம்
  - வயது : 25 இற்கு மேல்
- **அலுவலகச் செய்தியாளர்கள்** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 25 இற்கு மேல்
- **ஒப்புநோக்குநர்** (இருபாலாரும்)
  - தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி
  - வயது : 30 இற்கு மேல்
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்** (ஆண்)
  - தகைமை : க.பொ.த.சாதாரண தரம்
  - வயது : 40 இற்கு மேல்

தகைமையும் விருப்பமும் உடையவர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுயவிபரம் அடங்கிய விண்ணப்பப் படிவத்தை தயாரித்து
பொது முகாமையாளர்,
இல. 3, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு
சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

முடிவுத் திகதி : 10.01.2022

மேலதிக தொடர்புகளுக்கு பொது முகாமையாளர்
076 097 3121
- வலம்புரி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்டா-ஒமிக்ரோன் திரிபுகள் சுனாமி போன்று ஆபத்தான பேரலையை உருவாக்கும்

## உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை

(ஜெனிவா)

**டெல்டா மற்றும் ஒமிக்ரோன் திரிபுகளின் கலவையானது, கொவிட் எண்ணிக்கையில், ஆபத்தான பேரலையை உருவாக்குவதாக உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இது சுனாமி போன்று ஆபத்தான பேரலை என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரொஸ் அதானோம் கெப்ரியேஸஸ் தெரிவித்தார்.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் அதிகளவான புதிய நோயாளர்கள் பதிவாகின்றனர். அதிகமான நாளாந்த நோயாளர் எண்ணிக்கையாக, 2 இலட்சத்து 8 ஆயிரம் பேர் பிரான்சில் பதிவாகியுள்ளனர்.

ஜோன்ஸ் ஒப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தரவுகளின் படி, அமெரிக்காவில் கடந்த வாரத்தில் நாளொன்றுக்கு 2 இலட்சத்துக்கும் மேற்பட்ட புதிய நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

தற்போதைய நிலையில், சர்வதேச ரீதியில் நாளாந்தம் சுமார் 9 இலட்சம் கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதாக வெளிநாட்டு ஊடகமொன்றின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், இது இரண்டு வகையான திரிபுகளினதும் இரட்டை அச்சுறுத்தல் என உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரொஸ் அதானோம் கெப்ரியேஸஸ் எச்சரித்துள்ளார்.

இது சோர்வுற்றுள்ள சுகாதாரப் பணியாளர்கள் மீதும், சுகாதாரக் கட்டமைப்புகளின் மீதும் அதீத அழுத்தத்தைப் பிரயோகிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)



# தேர்தல் ஆணையத்தை கலைத்த தலிபான் அரசு ஆப்கானிஸ்தானின் ஜனநாயகம் இனி என்ன ஆகும்?



(காபூல்)

ஆப்கானிஸ்தானிலுள்ள தேர்தல் ஆணையத்தையும் தேர்தல் புகார் ஆணையத்தையும் தலிபான் அரசு கடந்த 26 ஆம்திகதி கலைத்துள்ளது. இது அந்நாட்டு மக்கள் மட்டுமல்லாது உலக நாடுகளையும் பயங்கர அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளது.

இவ்வாறு தேர்தல்ஆணையத்தை கலைப்பதால் தேர்தல் என்ற ஒன்றே இல்லாமல் சர்வாதிகாரம் தலைதூக்க வாய்ப்புள்ளது என அச்சம் தெரிவிக்கிறார்கள் உலக அரசியல் ஆர்வலர்கள்.

பல உலகநாடுகள்ஆப்கானிஸ்தானுக்குக் கடந்த 20 ஆண்டுகளாக ஆயுத பயிற்சிகளையும் ஆயுதங்களையும் வழங்கியுள்ளன.

இந்த ஆயுதங்கள் சர்வாதிகாரத்தின் கைகளில் சிக்கினால் போர்கள் மூளலாம். உள்நாட்டு மக்களின் பாதுகாப்புக்கும் குந்தகம் விளையலாம். (நி-5)

# ஜோர்டான் பாராளுமன்றத்தில் எம்.பி.க்கள் இடையே கைகலப்பு

(அம்மான்)

மத்திய கிழக்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான ஜோர்டானில் அரசியலமைப்பில் சீர்திருத்தங்களை கொண்டு வர அந்த நாட்டு அரசு முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக விவாதிப்பதற்காக அந்த நாட்டு பாராளுமன்றம் கூடியது.

எம்.பி.க்களின் காரசார விவாதம் தொலைக்காட்சியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

அப்போது பாலின சமத்துவம் குறித்த அரசியலமைப்பு சீர்திருத்தத்துக்கு எம்.பி ஒருவர் எதிர்ப்பு தெரிவித்து பேசியதால் அவையில் அமளி ஏற்பட்டது.

இதனால் சபாநாயகர் அந்த எம்.பி.யை அவையில் இருந்து வெளியேறுமாறு கூறினார்.

ஆனால் அந்த எம்.பி. அதை ஏற்க மறுத்ததோடு மட்டுமில்லாமல், சபாநாயகரை தாக்க முயன்றார். இதையடுத்து சபாநாயகருக்கு ஆதரவான எம்.பி.க்கள் அவரை தடுக்க முயன்றபோது கைகலப்பு உருவானது.

இதை தொடர்ந்து இரு தரப்பு எம்.பி.க்கள் ஒருவரையொருவர் தாக்கி கொண்டதால் அவையில் பதற்றம் உருவானது. இதனால் அவை ஒத்திவைக்கப்பட்டது.

இதனிடையே பாராளுமன்றத்தில் எம்.பி.க்கள் ஒருவரையொருவர் தாக்கி கொள்ளும் வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகிறது. (நி-5)



# ஒன்லைன் விளையாட்டிற்காக 3770 கோடியை செலவழித்துள்ள இந்தியர்கள்

## அதிரவைக்கும் புள்ளி விபரம்

(டில்லி)

கடந்த ஓராண்டில் மட்டும் ஒன்லைன் கேம்களை பதிவிறக்கம் செய்வதற்காக, சுமார் 3770 கோடிரூபாயை இந்தியர்கள் செலவழித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

உலகையே கொரோனா வைரஸ் ஆட்டிப்படைத்து வருவதால், டிஜிட்டல் மோகம் அதிகரித்து வருகிறது. வீட்டிற்குள்ளே முடங்கி கிடக்கும் மக்கள் ஒன்லைன் கேம்களுக்கு அடிமையாகி வருகின்றனர்.

இது குறித்து சந்தை ஆலோசனை நிறுவனமான நிக்கோ பார்ட்னர் வெளியிட்டுள்ள தகவலில், கூகுள் ப்ளே ஸ்டோர் மற்றும் ஆப்பிள் ப்ளே ஸ்டோர் மூலம் ஒன்லைனில் கேம்களை இந்தியர்கள் அதிகளவில் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

இதற்காக, அவர்கள் கடந்த ஓராண்டில் 3770 கோடியை செலவழித்துள்ளனர்.

ஆசியாவிலேயே செல்போன்மற்றும்கணினிவிளையாட்டுகளுக்கான மிகப்பெரிய சந்தையாக இந்தியா மாறி வருகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டில், சந்தையின் வருவாய் சுமார் 4000 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இது வரும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் 29.8 சதவீதமாக உயரும், அதாவது 11,000 கோடிரூபாயை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, விளையாட்டு அடிப்படையிலான செயலி வாயிலாக வந்த 377 கோடியாக இருந்தது.

ஆனால், தற்போது இது 10 மடங்காக அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது. தற்போது அதிகரித்து வரும், இந்த ஒன்லைன் கேம்களால், அவ்வப்போது தற்கொலை சம்பவங்களும் அரங்கேறி வருவதால், இனி மக்கள் தான் இந்த ஒன்லைன் கேம்களில் விழாமல் விழித்து கொள்ள வேண்டும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலைச் சந்தேக நபர்களுக்கு விளக்கமறியல்

(முறிகண்டி)

லண்டனிலிருந்து திரும்பிய பெண்ணின் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

குறித்த கொலையுடன் தொடர்புடைய 22 வயதுடைய இளைஞன் மற்றும் துணைபுரிந்த அவரது மனைவி இருவரும் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன் போது குறித்த இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் ஜனவரி 12 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கொலை செய் யப்பட்ட பெண்ணின் உடலம் உறவினர்களிடம் நேற்று முன்தினம் ஒப்படைக்கப்பட்டது.(4-5-100)

# இருக்கின்ற பிள்ளைகளையும் இல்லாதொழிப்பதே

# ஞானசார தேரரின் நோக்கம்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள்

(முறிகண்டி)

**ஞானசாரதேரர் இராணுவத்தை கொண்டுவந்து குவித்து, இருக்கின்ற பிள்ளைகளையும் இல்லாமலாக்குவார் என கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது சங்கத் தலைவி க.கோகிலவாணி தெரிவித்தார்.**

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற போராட்டத்தின் போது ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இராணுவமயப்படுத்தப்பட வேண்டும் என ஞானசார தேரர் கூறியிருக்கின்றார். ஏற்கனவே இராணுவமயமாக்கப்பட்ட நிலையில்தான் இன்று எங்களுடைய பிள்ளைகளை தொலைத்து தெருவில் நிற்கின்றோம்.

மேலும் ஞானசாரதேரர் இராணுவத்தை கொண்டு வந்து குவித்து, இருக்கின்ற பிள்ளைகளையும் இல்லாமலாக்குவாரேயன்றி, காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளை தேடித்தருவார்கள் என்ற நம்பிக்கை இல்லாமலேயே போகின்றது.

அவ்வாறு இராணுவமயமாக்கப்பட்டால் மேலும் எமது உறவுகளை இழக்க நேரிடும் என தெரிவித்தார். (4-5-100)

## சான்றுப்பொருட்களை பெற்றுக்கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் சான்றுப் பொருட்களாகவுள்ள **NPXL 7640, NP BBF 9735** ஆகிய இலக்கங்களைக் கொண்ட மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த ஆதாரம் காட்டி உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு உரிமை கோராத விடத்து 2 மாதங்களின் பின் எதுவித முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்றுப் பொருட்கள் பகிரங்க ஏல விற்பனை மூலம் விற் பனை செய்யப்படும் எனவும் முல்லைத்தீவு மாவட்ட நீதி வான் நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (4-5)

## சட்டவிரோத மது உற்பத்தி மல்லாவியில் ஒருவர் கைது

(கண்டாவளை)

மல்லாவி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனிஞ்சியன் குளம் 2ஆம் பகுதியில் சட்டவிரோத மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட ஒருவர் மல்லாவி பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

மல்லாவி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையில் சுமார் 95 லீற்றர் கோடா மற்றும் 50 லீற்றர் கசிப்பு என்பன கைப்பற்றப்பட்டதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைதாகினார்.

கைதான நபரை முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டனர்.(4-5-315)

## பளை பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கொரோனா

(முறிகண்டி)

பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளது.

கடந்த 23 ஆம் திகதி விடுமுறைக்குச் சென்று திரும்பியிருந்த நிலையில் அவருக்கு தொடர்ச்சியான காய்ச்சல் ஏற்பட்டது.

இந்நிலையில் அன்டிஜன் பரிசோதனை மேற்கொண்டதில் கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (4-5-100)

## முல்லையிலும் உறவுகள் நேற்று போராட்டம்




(பணிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் நேற்று கவனயீர்ப்புப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எங்கே, எங்கே உறவுகள் எங்கே, குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து , வேண்டும் நீதி வேண்டும், சர்வதேசமே பதில் சொல், மரணச் சான்றிதழும் வேண்டாம் நட்ட ஈடும் வேண்டாம் என்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (4-5-281)

## வெடி பொருட்கள் மீட்பு





(தருமபுரம்)

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆனைவிழுந்தான் பகுதியில் தனியார் காணி ஒன்றில் வெடிக்காத நிலையில் வெடிபொருள் ஒன்று அடையாளம் காணப்பட்டது.

அதேவேளை அக்கராயன் குளப்பகுதியிலும் வெடிபொருள் ஒன்று மீட்கப்பட்டது. தொடர்ந்து குறித்த விடயம் தொடர்பில் அக்கராயன் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

தகவலுக்கமைய வெடிபொருட்கள் மீட்கப்பட்டு நீதிமன்ற அனுமதியுடன் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (4-5-316)

## இரத்ததான முகாம்

(குப்பிழான்)

சுழிபுரம் பறாளை விளையாட்டுக் கழகமும், சுழிபுரம் நாவலர் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் இரத்ததான முகாம் இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை சுழிபுரம் பறாளை வீதியில் அமைந்துள்ள நாவலர் சனசமூக நிலைய மண் டபத்தில் இடம்பெறும்.


அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (4-5-18)

## யாழ். நெடுந்தூர பேருந்து நிலையத்தில்

# அரச, தனியார் பேருந்துகள் இணைந்து பயணிப்பது தொடர்பில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பேருந்து நிலையத்தை அரச பேருந்துகளும் தனியார் பேருந்துகளும் இணைந்து பயன்படுத்துவதற்கான பொது இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் நோக்கிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் புதன்கிழமை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் யாழ். மாவட்டச்



செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்திலிருந்து வெளி மாவட்டங்களுக்கு மேற்கொள்ளப்படுகின்ற அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவைகளை இணைந்த நேர அட்டவணையில் மேற்கொள்வதில் இருக்கும் நடைமுறைச் சிக்கல்கள் மற்றும் யாழ். நகரில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பேருந்து நிலையத்தை மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் எவ்வாறு செயற்படுத்துவது?, சேவையில் ஈடுபடுபவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களும் கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்ட அனைத்துத் தரப்பினரதும் கருத்துக்களை கேட்டறிந்த கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குறித்த விடயங்கள் தொடர்பாக துறைசார் அமைச்சர்களுடன் கலந்துரையாடி விரைவில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டார்.

குறித்த கலந்துரையாடலில் யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம. பிரதீபன், வடபிராந்தியப் போக்குவரத்துப் பொது முகாமையாளர் செ. குணபாலச் செல்வம், பொதுப் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் சு.அமிர்தலிங்கம், இலங்கை போக்குவரத்துச் சபையின் முகாமையாளர்கள் மற்றும் தனியார் பேருந்து உரிமையாளர் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (4-5-18)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருவாசக ஊர் - காரைநகர்

# கிழவன்காடு கலாமன்றம் - மனோன்மணி அரங்கில் இடம்பெற்ற

# தெய்வீகக் கலை அரங்கு



பிலவ வருஷம் 2021 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 1 ஆம் திகதி (2021.12.16) பி.ப. 4.00 மணியளவில் காரைநகர் கிழவன்காடு கலாமன்றம்-மனோன் மணி அரங்கில் தெய்வீகக் கலையரங்கு இடம்பெற்றது. வேத விற்பன்னர்களின் வேதபாராயண மந்திர ஒலி முழக்கம் திருவாசக குயில் காரை லீலாவதி இராசரத்தினத்தின் பண்ணிசையோடு கூடிய திருவாசகப் பாடல்கள் கருங்கல் மனமும் கரையக் கண்கள் தொடு மணற் கேணியில் சுரந்து நீர் பாய அனைவரையும் பக்தி மழையில் நனைய வைத்து "தெய்வீகக் கலை அரங்கு" என்பதைத் தெளிவுபடுத்தியது.

க.கணேசமூர்த்தியின் "சிந்தனைக்கு ஒரு விருந்து" சிந்தனைக்கு தீனி போட்டது. "செஞ்சொற்செல்வர்" "கலாநிதி" ஆறு.திருமுருகனிற்கு "அறவழி நாயகன்" என்ற பட்டம் வழங்கிக் கௌரவித்தமை நிகழ்ச்சிக்கு உயிர்ப்பூட்டியது.

"உலப்பிலா ஆனந்தம்" என்ற தலைப்பில் "அறவழி நாயகன்" வழங்கிய சொற்பொழிவு ஆரவாரமின்றி அமைதியாக ஆளுமைத் தன்மையின் வெளிப்பாடாக அமைந்தது.

"பால் நினைந்தூட்டும்" என்ற திருவாசகப் பாடலை அர்த்தமுள்ளதாக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்த த்தை சபையினருக்கு வழங்கினார். காரை நகரின் பெருமையை வெளிப்படுத்துவதான கருத்துக்கள் அவரது சொற்பொழிவில் இடம்பெற்றன.

பல வருடங்களுக்கு முன்பே "திருவாசக ஆராய்ச்சியுரை" பண்டிதர் சு.அருளம்பலவனாரால் எழுதப்பட்டது காரை மண்ணில் தான்.

அது மட்டுமா? கலாநிதி. வைத்தீசுவரக் குருக்கள் ஐயா ஒரு பழுத்த பழம். திருவாசகத்தில் ஊறித்திளைத்தவர் சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி காரை நகர் மணிவாசகர் சபையில் திருவெம்பா பத்து நாட்களும் சொற்பொழிவு ஆற்றுவார். ஆனால் சொற்பொழிவுக்கான தலைப்பை வழங்குவது குருக்கள் ஐயா தான். சகோதரி இம்முறை இத் தலைப்புகளில் தான் பேச வேண்டும் என்று ஒரு தபாலட்டையில் எழுதி அனுப்புவார். அத்தலைப்பைத் தேடுவதற்கே பத்து நாட்கள் எடுக்கும் என்று அம்மா கூறியதாகச் சொன்னார். அவ்வளவு தூரம் திருவாசகத்தை அக்கு வேறு ஆணி வேறாக ஆராய்ந்த புலமை மிக்கவர் குருக்கள் ஐயா.

காரைநகர் மணிவாசகர் சபை அம்மாவுக்கு வழங்கிய கௌரவப் பட்டம் தான் "சிவத் தமிழ்ச் செல்வி" என்ற பட்டம். எத்தனையோ கௌரவப் பட்டங்கள் வழங்கப்பட்ட போதும் உயிருள்ளவரை அவரோடு உறவாடி இன்றுவரை நிலைத்திருப்பது இப்பட்டம் மட்டுமே. எனவே மணிவாசகர் சபையின் பணிகளும் அளவிடற்கரியன.

மேலும் சிறுவர் முதல் பெரியோர் வரை சாதாரண மக்களும் திருவாசகப் பாடல்களை மனனம் செய்து வைத்துள்ளனர். எனவே இந்த ஊரை காரைநகர் என்று கூறுவதை விட "திருவாசக ஊர்" என்று கூறுவதே பொருந்தும் என அறவழிநாயகன் கலாநிதி. ஆறு.திருமுருகன் கூறினார்.

மேலும் 'நாட்டில் அர்ப்பணம்' கலாமன்ற யாழ்.கிளை நடன ஆசிரியர் நுண்கலைப்பணி "ஆனந்த கிருஷ்ணன் ஸ்ரீகாந்த" ஆடலரசன் அம்பலத்தானின் அற்புதங்களை தமது நாட்டியத்தின் மூலம் அர்ப்பணம் சபையை மகிழ்ச்சி வெள்ளத்தில் திளைக்க வைத்தார்.

வில்லிசைக் குழு கலைவாணர் சின்னமணியின் சிஷ்யர் வழங்கிய "பார்வதி கல்யாணம்" என்ற வில்லிசை மிகவும் அற்புதமாக இருந்தது. மொத்தத்தில் தெய்வீகக் கலையரங்கு தெய்வீகமாகக்களை கட்டியது.



நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர் மக்களின் அசௌகரியங்களைக் குறைக்கும் வழியில் யாழ்.-காரை இ.போ.ச.சேவை வழங்கியமை சாலச்சிறந்தது.

**பண்டிதை**
**காரை யோகலட்சுமி சோமசுந்தரம்**

## சர்வதேச கடன்களில்

# வெளிநாட்டு கையிருப்பை தக்கவைப்பது ஆபத்து

### இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த

(கொழும்பு)

சர்வதேச நாடுகளிடம் கடன்களைப் பெற்று எமது வெளிநாட்டுகையிருப்பை தக்க வைக்க முடியாது. அவ்வாறு முயற்சிப்பதன் மூலமாக மேலும் மோசமான கடன் பொறிக்குள் சிக்கும் நிலைமையே ஏற்படுமென இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

குறுகியகால சவால்களை எவ்வாறு கையாளப்போகின்றோம், நீண்டகால கடன் நெருக்கடிகளுக்கு எவ்வாறு முகங்கொடுக்க போகின்றோம் என்பன பாரதூரமான பிரச்சினையாகும்.

வெளிநாட்டுகையிருப்பு நெருக்கடி மற்றும் சீனாவிடம் புதிதாக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கடன்கள் குறித்து தெளிவுபடுத்தும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டிற்கு தேவையான எரிபொருளை கொள்வனவு செய்ய டொலர்கள் இல்லை, குழந்தைகளுக்கான பால் மாவை இறக்குமதிசெய்ய வெளிநாட்டு கையிருப்பு இல்லை, துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களை விடுவிக்க டொலர் இல்லை.

நாட்டில் பாரிய அளவில் அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு நிலையொன்று ஏற்பட்டுள்ளது. இவற்றை சமாளிக்கக்கூடிய வகையில் எமது வெளிநாட்டு கையிருப்பு இல்லை.

எமது கையிருப்பில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர்களே உள்ளன. இப்போது சீனாவிடம் பெற்றுக்கொண்ட கடன்கள் மூலமாக இந்த எண்ணிக்கை 3.1 பில்லியன் டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

எனினும் இவ்வாறு வேறு நாடுகளிடம் கடன்களை பெற்றுக்கொண்டு எமது கையிருப்பை தக்கவைக்க முடியாது. பெற்றுக்கொண்ட கடன்களை வட்டியுடன் மீளவும் செலுத்த வேண்டும்.

ஆகவே கடன்களில் வெளிநாட்டு கையிருப்பை தக்க வைக்க நினைப்பது பாதகமான செயற்பாடாகும். இதன்போது குறுகியகால சவால்களை எவ்வாறு கையாளப்போகின்றோம். நீண்டகால கடன் நெருக்கடிகளுக்கு எவ்வாறு முகங்கொடுக்க போகின்றோம் என்பன பாரதூரமான பிரச்சினைகளாகும்.

அடுத்த ஆண்டில் 6.2 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கை சர்வதேச கடன்களாக செலுத்த வேண்டியுள்ளது. இவற்றில் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான சர்வதேச பிணைமுறிகள் உள்ளடங்குகின்றன.

எனவே இவற்றை சமாளிக்க சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதையோ அல்லது வேறு மாற்று வேலைத்திட்டங்களை கையாள்வதையோ சிந்திக்க வேண்டும். எந்த தீர்மானம் எடுத்தாலும் அவற்றை உடனடியாக எடுக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 340 | 350 | 320 | 320 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 900 | 1000 | 900 |
| தக்காளி | 260 | 260 | 200 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 60 | 50 |
| கோவா | 320 | 380 | 340 | 400 |
| கரட் | 450 | 480 | 500 | 600 |
| பூசணி | 80 | 70 | 60 | 100 |
| புடோல் | 320 | 250 | 220 | 300 |
| வாழைக்காய் | 80 | 70 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 240 | 250 | 150-250 | 320 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 180-250 | 200 |
| பாகற்காய் | 550 | 500 | 400 | 800 |
| வெண்டிக்காய் | 260 | 200 | 180 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 110 | 120 |
| பயற்றங்காய் | 350 | 400 | 350 | 300 |
| லீக்ஸ் | 320 | 340 | 340 | 400 |
| பீற்றூட் | — | — | — | — |
| கறிமிளகாய் | 650 | 650 | 750 | 800 |
| முருங்கைக்காய் | 1200 | — | 1200 | — |
| போஞ்சி | 280 | 300 | 360 | 350 |
| கத்தரிதம்புள்ள | 320 | 300 | — | 300 |
| கீரை - 1 பிடி | 80 | 70 | 120 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 40-80 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 260 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 450 | 480 | — | — |
| முள்ளங்கி | 160 | 200 | — | 240 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 100 | 40 |
| வல்லாரை | 25 | 36 | 50 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வருடாந்தம் 12 ஆயிரம் பேர் திடீர் விபத்துக்களால் உயிரிழப்பு

(கொழும்பு)

**திடீர் விபத்துக்களினால், நாட்டில் வருடமொன்றுக்கு சுமார் 12,000 பேர் வரை மரணிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இதன்படி, நாளொன்றுக்கு 35 பேர் வரை திடீர் விபத்துக்களினால் மரணிக்கின்றனர்.

வருடமொன்றுக்கு 3 முதல் 4 மில்லியனுக்கு இடைப்பட்ட அளவிலானோர் திடீர் விபத்துகளுக்கு உள்ளாகின்ற நிலையில், அவர்களுள் நாளாந்தம் 12,000 பேர் வரை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவதாக தொற்றா நோய் பிரிவு தெரிவித்துள்ளது.

பண்டிகைக் காலத்தில் விபத்துக்கள் ஏற்படும் நிலைமை அதிகரித்துள்ளதாகவும் அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. (நி-5)

# எரிவாயு சிலிண்டர்களைப் பெற நீண்ட வரிசையில் மக்கள்

(புத்தளம்)



புத்தளம் மதுரங்குளி 10 ஆம் கட்டை எரிவாயு மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனை நிலையத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகளவிலான மக்கள் நீண்ட வரிசையில் நின்றதை காணக்கூடியதாக இருந்தது.

டோக்கன் அடிப்படையில் ஒரு நாளைக்கு 100 பேருக்கு மாத்திரம் எரிவாயு சிலிண்டர் வழங்கப்படுவதாக எரிவாயு விற்பனை நிலைய முகவரொருவர் தெரிவித்தார். (நி)

# மக்கள் எதிர்ப்பால் வெளியேறிய அமைச்சர்

(கொழும்பு)

குடிநீர் திட்டத்தை திறந்து வைப்பதற்காக எஹலியகொட வலமுட்ட பிரதேசத்திற்கு வந்த அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவின் வாகனத்தை போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தினர்.

போராட்டக்காரர்கள் அமைச்சரை நோக்கி கூச்சலிட்டதை அடுத்து அவரது பாதுகாவலர்கள் அவரை வெளியேற்ற முயன்றனர்.

பின்னர் எஹலியகொட பொலிஸ் நிலைய அதிகாரிகளும் சம்பவ இடத்திற்கு வருகை தந்ததையடுத்து அமைச்சர் திறப்பு விழாவை கைவிட்டு அங்கிருந்து வெளியேறினார். (நி-5)

# உலக சுற்றுலா அழகியாக இலங்கை பெண் தெரிவு



(கொழும்பு)

உலக சுற்றுலா அழகியாக இலங்கை பெண் நலிஷா பானு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

30 நாடுகளுக்கிடையில் நடைபெற்ற உலக சுற்றுலா அழகிப் போட்டியில் இலங்கை பெண் வெற்றி பெற்று கிரீடத்தை சுவீகரித்துக்கொண்டுள்ளார்.

குறித்த போட்டி நிகழ்வுகள் கடந்த செவ்வாய்க்கிழமை பிலிப்பைன்ஸில் நடைபெற்றது.

உலக சுற்றுலா அழகிப் போட்டியில் இதற்கு முன்னர் இலங்கைக்கு மூன்றாவது இடம் கிடைத்திருந்த நிலையில், கிரீடத்தை சுவீகரித்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். (நி-5)

# திடீரென தீப்பற்றி எரிந்த கார்

(கொழும்பு)



கொழும்பு - காலிமுகத்திடலில் அதிசொகுசு காரொன்று தீப்பற்றி எரிந்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. குறித்த கார் நேற்று முன் தினம் இரவு 10.30 மணியளவில் தீப்பற்றியுள்ளதுடன், கார் முழுமையாகவே தீக்கிரையாகியுள்ளது.

இதனையடுத்து கொழும்பு தீயணைப்பு பிரிவினர், தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். இவ்விபத்து தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புறக்கோட்டை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## உள்ளத்தோடு வையுங்கள்

மனதில் படுபவை எல்லாவற்றையும் வெளியில் சொல்ல வேண்டும் என்பதில்லை. அதேநேரத்தில் மனதில் ஒன்று வெளியில் ஒன்று என்பதும் தேவையில்லை.

பக்குவப்படாத மனம் தாறுமாறாக எண்ணத் தொடங்குகிறது. அது மனதுக்குள்ளே இருந்து மறையட்டும். அதற்கு எழுத்து வடிவமோ சொல் வடிவமோ தராதீர்கள்.

அப்படி வடிவம் தருவதன் மூலம் நல்ல பெயரை விடப் பொல்லாப்பே மிஞ்சுகிறது. மனதில் எண்ணுவதெல்லாம் அப்படியே கக்கி விடாமல் சொல்ல வேண்டியதை மட்டும் சொல்பவர்களும் எழுத வேண்டியதை மட்டுமே எழுதுபவர்களும் தான், இன்றைய உலகில் சிறந்த பண்பாளர்களாக உச்சி மேல் வைத்துப் போற்றக் கூடிய உத்தமர்களாக விளங்குகிறார்கள்.

எனக்கு எதையும் மறைக்கத் தெரியாது. பட்பட் என்று கேட்டு விடுவேன். சிதறுகாய் அடிக்கிற மாதிரி எதையும் யார் முன்னும் கேட்டு விடுவேன் என்பதை தங்கள் இயல்பாகக் கூறுபவர்கள் இனிச் சற்றுச் சிந்திக்க வேண்டும்.

இவர்கள் தங்கள் வாழ்நாளின் வரலாற்றைப் புரட்டட்டும். அப்படிப்பட்ட இயல்பால் தாங்கள் அடைந்த கஷ்டங்களையும் நட்டங்களையும் சற்றேனும் உயர்ந்தே பார்க்கட்டும்.

கஷ்ட நட்டமாவது? நான் அடைந்தவை நற்பலன்கள் தாம் என்று வாதம் புரிபவர்கள், தாங்கள் பலரால் விரும்பப்படுகிற நபராக விளங்குகிறோமோ என்று சிந்திக்கட்டும்.

எதையும் வெந்ததும் வேகாததுமாகக் கொட்டித் தீர்க்கக் கூடாது. காரணம் அதை ஏற்பவர்களால் ஜீரணம் செய்ய முடியாமல் போய் விடும்.

எது ஒன்றைச் சொல்வதற்கு முன்னும் இதைச் சொல்ல வேண்டிய கட்டாயம் தான் என்ன? கேட்கும் நபர் உரியவர்தானா? நாம் சொல்லும் நேரம் காலம் சரிதானா? இதன் பின்விளைவுகள் என்னவாய் இருக்கும் என்றெல்லாம் சிந்திக்க வேண்டும்.

கொதிக்கும் உணர்வுகளுக்கு அறிவு என்னும் நீரை ஊற்றி ஆற்றுவோம். கட்டுக்கடங்காத எண்ணச் சிதறல்களுக்கென நிதானம் என்னும் அணையைக் கட்டுவோம்.

துள்ளியெழுந்து துடித்து வெளிவரத் துடிக்கும் கருத்துக்களின் மீது பொறுமை என்னும் வலையை வீசுவோம்.

அப்படிச் செய்வோமானால் நம்மைச் சுற்றி உள்ளவர்களின் உள்ளத்தில் நீங்கா இடம் பெறுவோம்.

**லேனா தமிழ்வாணன்**



# சிறுவர் அரங்கம்

## சகுனி



தான் வசமாக மாட்டிக் கொண்டதை உணர்ந்து திடுக்கிட்டான் ஞானமணி. அவன் தேம்பி தேம்பி அழுதான். சற்று தொலைவில் புதருக்குள் மறைந்து கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த வீரராசாவுக்கு தன் தந்தையின் சூழ்ச்சி புரிந்து விட்டது. அவன் புதருக்குள் இருந்து வெளியேறினான்.

மரத்தடிக்கு சென்று "அடே ஞானமணி" என்று குரல் கொடுத்தான். நண்பனின் குரல் கேட்ட ஞானமணி மகிழ்ச்சியடைந்தான். "அடே என்னை காப்பாத்துடா கட்டை அவிழ்த்து என்னைக் கீழே இறக்குடா" என்று கத்தினான். வீரராசா கட்டை அவிழ்த்து ஞானமணியை கீழே இறக்கினான்.

"உங்கப்பா என்னை கொன்று விட நினைத்தார். எனவே, நாம் இருவரும் சேர்ந்து அவருக்கு பாடம் புகட்ட வேண்டும்" என்றான் ஞானமணி. வீரராசாவை கோணிப் பையில் கட்டி மரத்தின் உச்சிக்கு இழுத்து கட்டிப்போட்டு விட்டு வீடு திரும்பினான் அவன்.

இரவு வந்தது. வீரராசா வீடு திரும்பவில்லை. தந்தை சகுனிராசன் அமைதியிழந்து காணப்பட்டான். இரவு வெகுநேரம் ஆகியும் மகன் வீடு திரும்பவில்லை. அந்த ஊர் முழுவதும் தேடி அலைந்தான் தந்தை. கம்சபுரம் பிரதேசம் முழுவதும் தேடியும் மகன் அகப்படவில்லை. மகனை உயிருக்குயிராக நேசித்து வந்த சகுனிராசன் கதறி அழுதான்.

ஞானமணிக்கு செய்த கொடுமைதான் தன் மகனை தன்னிடமிருந்து பறித்தது என்ற குற்ற உணர்வு அவனை மேலும் அழச் செய்தது. அடுத்த நாள் காலை சகுனிராசன் காட்டிற்கு ஓடினான். அவன் மரத்தடியில் நின்று மர உச்சியைப்பார்த்தான். அங்கே கோணிப் பை தொங்கிக் கொண்டிருந்தது. அவன் கயிற்றை அவிழ்த்து கோணிப் பையை கீழே இறக்கி கட்டு அவிழ்த்து போது அதிர்ச்சி அடைந்தான்.

ஞானமணிக்கு பதிலாக தன் மகன் வீரராசா எப்படி கோணிப் பைக்குள் அகப்பட்டான்? தந்தையின் சந்தேகத்தை போக்கினான் மகன். "அப்பா, நீங்க செய்த சதி என்னையே மாட்ட வைத்தது பார்த்தீர்களா?" என்றான் வீரராசன்.

என்ன நடந்தது என்று விளங்காமல் விழித்துக் கொண்டிருந்தான் சகுனிராசன் அப்போது. அங்கே வந்த ஞானமணி, "ஐயா, நீங்க என்னைக் கொல்ல நினைத்தீர்களா? பொறாமை உங்கள் கண்களை மறைத்தது.

உங்கள் மகன் இல்லை என்றால் நான் பட்டினி கிடந்து செத்திருப்பேன்" என்றான்.

தன் செயலால் தன் செல்ல மகனே பாதிக்கப்பட்டதை கண்டு வெட்கத்தால் தலைகுனிந்தான் சகுனிராசன். "நீங்கள் என் கர்வத்தை அழித்து விட்டீர்கள்.

இனிமேல்நான் ஆணவம் பிடித்தவனாக இருக்கமாட்டேன்" என்று கூறி அழுதான் சகுனிராசன். அதைக் கண்டு நண்பர்கள் இருவரும் மகிழ்ச்சி அடைந்தனர்.

நீதி : பிறர் நம்மை விட புத்திசாலியாக இருப்பதைக் கண்டு பொறாமைப்படக்கூடாது. ஒருபோதும் பொறாமையால் எதையும் பெற முடியாது.

(முற்றும்)

# மகாபாரதம்




பார்வதி-புலால் உண்பதால் ஏற்படும் தீமை யாது? உண்ணாமையால் ஏற்படும் நன்மை யாது?

ஈஸ்வரன்- எல்லா தான தருமங்களும் புலால் உண்ணாமையால் ஏற்படும் நன்மைக்கு ஈடாகாது. தன் உயிரைக் காக்கப் பிற உயிரைக் கொல்லக்கூடாது.

நம் உடலுறுப்புக்களை அறுக்கும் போது நமக்கு ஏற்படும் துன்பம் போலவே பிற உயிர்களை அறுக்கும் போதும் அவ்வுயிர்களுக்கு துன்பம் ஏற்படுகிறது.

நூறு வருடம் தவம் செய்தால் ஏற்படும் பயன் புலால் உண்ணாமையால் ஏற்படும். தன் உயிரைக் காட்டிலும் ஒருவருக்கு இனிமை பிறிதில்லை. ஆதலால் எல்லா உயிர்களிடத்தும் இரக்கத்துடன் இருந்து அவற்றிற்கு நன்மை செய்ய வேண்டும்.

பார்வதி-எல்லாத் தருமங்களிலும் உயர்ந்த மோட்ச தருமம் எப்படி வர்ணிக்கப்படுகிறது? தோற்றமும், முடிவும் இல்லாத மோட்ச தருமம் எப்படி உயர்ந்ததாக ஆகிறது?

ஈஸ்வரன்-மோட்சத்திற்கு உரிய வழிமுறைகள் எல்லா அகமங்களிலும் கூறப்பட்டுள்ளது. தருமத்தின் செயல் எதுவும் வீணாவதில்லை. யார் யார் எந்தெந்தத் தருமங்களில் உறுதியாய் உள்ளனரோ, அந்தந்தத் தருமங்கள் மோட்ச மார்க்கமேயாகும்.

மோட்சம் தான் எல்லாத் தருமங்களின் முடிவு. இதனினும் சிறந்த ஓர் உயர்நிலை வேறெதுவுமில்லை. எனவே மோட்ச மார்க்கத்தை அறிந்து கொள்வது அவசியம் தான். இதைப் பற்றி விளக்குகிறேன்.

மோட்சம் மனதாலும் அறிய முடியா மாண்புடையது. மோட்ச ஞானமே உயர்ந்த ஞானமாகும். மகரிஷிகள் அதை பரமபதம் என கொண்டாடுகிறார்கள். அழியாததும் அந்தமில்லாததும் இன்பம் தரக்கூடியதுமானஅம்மோட்சத்தை நோக்கித் தான் எல்லா உயிர்களும் பயணம் செய்கின்றன.

ஆயினும் ஒழுக்கத்தால் உயர்ந்தவரே அதை அடைய முடிகிறது. இந்தப் பிறவியானது துக்க சாகரத்தில் மூழ்கித் துன்புறுகிறது.

சம்சாரம் என்பது பிறப்பு, பிணி, மூப்பு என்னும் துக்கத்தால் நிறைந்துள்ளது. இறப்போ பிறப்புக்கு வித்தாகிறது.

ஆகாயத்தில் காணப்படும் விண்மீன்கள் எவ்வாறு மீண்டும், மீண்டும் சுற்றுகின்றனவோ அவ்வாறு தான் பிறப்பும் உள்ளது.

எறும்பு முதல் யானை வரையிலுமான பல உடல்களில் சென்று உயிர் பல பிறவிகளை எடுக்கிறது.

இந்தப் பிறவியாகிய கடலிலிருந்து கரை ஏற உதவும் படகாக இருப்பதுதான் ஆத்ம ஞானம். ஆத்ம ஞானம் என்பது உயிரின் உண்மைத் தன்மையை உணர்ந்து கர்மத்தளையிலிருந்து விடுபடும் உபாயம் ஆகும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி – மாந்தர்க்குக் கற்றனைத்து ஊறும் அறிவு.
– திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பேராசிரியர்களால் நிறைந்த எங்கள் யாழ்ப்பாண மண்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் பேராசிரியர்கள் என்ற மாண்பைப் பெற்றுள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெவ்வேறு துறைகளில் இருந்து, பேராசிரியர் என்ற தகைமையைப் பெற்றவர்களின் எண்ணிக்கை முன்பு ஒருபோதும் இல்லாத வகையில் இம்முறை கிடைக்கப் பெற்றுள்ளது.

அந்தவகையில் பேராசிரியர்கள் எனும் மாண்பைப் பெற்ற அத்தனை பேரையும் வாழ்த்துகின்றோம்.

அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பேராசிரியர்களின் எண்ணிக்கை உயர்வு பெற்றிருப்பது மிகுந்த மனநிறைவைத் தருகிறது.

அதேநேரம் பேராசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது அதனூடு எமது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கனதியும் காத்திரமும் உன்னதத்தை அடைய வேண்டும்.

தவிர, எங்கள் தமிழர் நிலத்தில் பொருத்தப்பாடான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு எங்கள் மக்களின் வாழ்வியலில் உன்னதத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆம், பொருத்தமானதும் எங்கள் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்குமான ஆய்வுகளும் முன்மொழிவுகளும் தாராளமாகட்டும்.

அதிலும் குறிப்பாக, எங்கள் வடபுலத்து மாணவர்களின் கல்வி தொடர்பில் துறைசார் பேராசிரியர்களும் மருத்துவத்துறை பேராசிரியர்கள் மற்றும் விஞ்ஞானம், கணிதம், வணிகம், கலைத்துறைசார் பேராசிரியர்களும் இணைந்து ஆராய்ச்சிகளை முன்னெடுத்து எங்கள் மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துகின்ற பணிகளை ஆற்ற வேண்டும்.

இதற்கு மேலாக, தென்பகுதியில் துறைசார் பேராசிரியர்கள் தாம் சார்ந்த உயர்தர மாணவர்களுக்கு பாடரீதியாக கருத்தரங்குகளை நடத்தியும் மாதிரி வினாத்தாள்களை வழங்கியும் பரீட்சைக்குத் தயார்படுத்துகின்றனர்.

உயர்தரப் பரீட்சைக்குரிய வினாத்தாள்களைத் தயாரிக்கக்கூடிய பேராசிரியர்கள் கருத்தரங்குகளை நடத்துவதால், அந்த மாணவர்களின் கல்விப் பெறுபேறுகள் உயர்ந்ததாக அமைகின்றன.

ஆனால் எங்கள் வடபுலத்து தமிழ் மாணவர்களுக்கு அந்தக் கருத்தரங்குகள் கிட்டுவதே இல்லை.

அதிலும் குறிப்பாக விஞ்ஞான, கணிதத்துறை மாணவர்களுக்கு பேராசிரியர்களின் கருத்தரங்குகளும் அவர்களால் தயாரிக்கப்படுகின்ற மாதிரி வினாத்தாள்களும் கிடைக்காமையால்; எவ்வளவுதான் எம் மாணவர்கள் முயன்று கற்றாலும் அவர்களால் உயர் கல்விப் பெறுபேற்றை அடைய முடிவதில்லை. இதுவே யதார்த்தம்.

எனவே சிங்கள, முஸ்லிம் பேராசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் அவர்தம் மாணவர்களுக்கு நடத்தப்படுகின்ற கருத்தரங்குகளும் மாதிரி வினாத்தாள்களும் எங்கள் மாணவர்களுக்கும் கிடைக்க வேண்டும்.

இதற்கு எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் ஏற்பாடு செய்யும்போது பேராசிரியர்களால் நிறைந்த எம் மண் அதற்குரிய பயனை அனுபவிக்கும்.

# முட்டாள்தனமான தீர்மானங்களால் நாட்டை அரசு தீக்கிரையாக்கியுள்ளது

## எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

"காபனிக் உரப் பிரச்சினையால் முழு நாடும் பற்றி எரிகின்றது. முட்டாள்தனமான முடிவுகளால் நாட்டையே தீக்கிரையாக்கியுள்ளது."

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

அவர் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது,

உரப் பிரச்சினை காரணமாக விவசாய நிலங்கள் தீயில் எரிகின்றன. விவசாயிகளின் வயிறும் எரிகின்றது. அதுமட்டுமன்றி சமையலறை தீப்பற்றி எரிகின்றது. முட்டாள்தனமான முடிவுகளால் நாட்டையே தீக்கிரையாக்கியுள்ளனர்.

மரத்தின் வேர்கள் வலுவிழக்கும்போது, கிளைகளைச் சபிப்பது பயனற்றது. அங்கு முழு அமைப்பும் உடைந்து விடுகின்றது.

ஜனாதிபதி, அதிகாரிகளைத் திட்டுவதில் அர்த்தமில்லை. ஜனாதிபதியின் முடிவுகளினாலேயே நாட்டில் இவ்வாறான தொரு நிலைமை ஏற்பட்டுள்ளது என்றார். (ம)

# சர்வதேச நாணய நிதியத்தை அரசு நாடுவதில் தவறில்லை

## அமைச்சர் அமரவீர தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பொருளாதாரம் பாரிய நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இந்த வேளையில், சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை அரசு நாடுவதில் தவறில்லை என சுற்றாடல் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் பல அரசுகள் நெருக்கடியான காலங்களில் சர்வதேச நாணய நிதியத்தை நாடின. ஏற்றுக்கொள்ளக்கூடிய நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டன. அத்துடன் ஏற்க முடியாதவற்றை நிராகரித்தன.

நட்டத்தில் இயங்கும் சில நிறுவனங்களைத் தனியார் மயமாக்க வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் நிபந்தனை விதிக்கலாம். அரச சேவைக்குப் புதிதாக ஆட்களை இணைத்துக்கொள்ளக்கூடாது போன்ற நிபந்தனைகளும் விதிக்கப்படலாம்.

அரச சேவைக்கு ஆட்களை இணைத்துக் கொள்வதில் தற்போதைக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது. ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் போன்ற அதிக நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவது பிரச்சினையாக இருக்காது.

எனினும், சர்வதேச நாணய நிதியம் விதிக்கும் அனைத்து நிபந்தனைகளையும் அரசு ஏற்றுக்கொள்ளக் கூடாது. இலங்கை, சர்வதேச நாணய நிதியத்தின் உதவியையோ அல்லது வேறு ஒரு நட்பு நாட்டின் ஆதரவையோ பெற வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் தெரிவித்துள்ளார். (ம)

## நாம் உருவாக்கிய அரசிலிருந்து ஏன் விலகிச் செல்லவேண்டும்?

### அமைச்சர் வாசுதேவ கேள்வி

(கொழும்பு)

நாங்கள் உருவாக்கிய அரசிலிருந்து நாங்கள் ஏன் விலகிச் செல்ல வேண்டும் என்று நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

இது தொடர்பில் சிங்கள ஊடகம் ஒன்றிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசிலிருந்து விலகிச் செல்லும் எந்த எண்ணமும் எமக்கு இல்லை.

நுகேகொடையில் இருந்து மகிந்த காற்று வீசிய நாள் முதல் மேற்கொள்ளப்பட்ட பயணத்தின் இறுதிப் பலனாக இந்த அரசு உருவாக்கப்பட்டது.

ஜனாதிபதியுடன் முன்னோக்கிச் செல்வதே ஒரே நம்பிக்கை.

ஆனால், நாட்டுக்கு ஏதேனும் அசம்பாவிதம் நடந்தால் அது குறித்து கேள்வி எழுப்பப்படும் என்றார். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 01ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** உடுவில், சங்குவேலி, உடுவில் மகளிர் கல்லூரி ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## பாலின் விலை அதிகரிப்பு?

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் பாலின் விலையிலும் அதிகரிப்பு ஏற்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாலின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாக கால்நடைவள இராஜாங்க அமைச்சர் டீ.பி ஹேரத் தெரிவித்துள்ளார். அதிகரிக்கப்பட்டுள்ள இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால்மா பொதியின் விலைக்கு இணையாக இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூர் பால் உற்பத்தியை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இன்று முதல் அமுலாகும் வகையில், இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலை மீள அதிகரிக்கப்படுவதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (ம)

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### வழிபட வேண்டாம் அல்லது உருவ வழிபாடு வேண்டாம்

பைபிள் சொல்கிறது: "நான் உங்கள் ஆண்டவன். என் முன்னால் வேறு எந்தக் கடவுள்களையும் நீங்கள் கொண்டிருக்கக்கூடாது. பண்டைய இந்தியத் திருமறை நூல்களும் இதனையே சொல்கின்றன. "நான் உள்ளேன் என்ற மந்த நிலையிலிருந்து பிரிந்து இறைவனை வழிபடுபவர்கள் மந்த புத்தியுள்ள வர்கள்". வேறு கடவுள்களை வழிபடவேண்டாம்.

நிவேதனம் நிவேதிக்கப்பட்டது, நிவேதனம் ... (முற்றும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

### அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்களை அடையும் உபாயங்கள்

இரவில் கிழக்கில் தலைவைத்துப் படுத்தல் நல்லது. வடக்கில் தலைவைத்துப் படுத்தல் எப்போதும் கூடாது. தூய உணவை உண்டால் தூய குணம் வளரும். குருவருளும் திருவருளும் பெற்றால் இறைவன் ஞான வடிவைக் காணலாம். மன அழுக்கு தியானத்தாலும் வாயழுக்கு துதிப்பதாலும் மெய்யழுக்கு அருச்சனையாலும் நீங்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய எண் முறைமைகளும் பழந்தமிழரின் அளவை முறைகளும்-பகுதி II

44

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



பழங்கால கல்வெட்டு எழுத்துகளை சரளமாக படிக்கும் ராமநாதபுரம் மாவட்ட பள்ளி மாணவி கோகிலா (நன்றி BBC news தமிழ் 2018)





### வட்டெழுத்து

வட்டெழுத்து என்பது கி.பி.மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி.பத்தாம் நூற்றாண்டு வரை தமிழை எழுத பயன்படுத்தப்பட்டு வந்த ஓர் எழுத்து முறையாகும். வளைந்த கோடுகளையே அதிகமாகக் கொண்டிருந்ததால் வட்டெழுத்து என்று பெயர் பெற்றது. வட்டெழுத்தை மலையாள மொழியினை எழுதவும் பயன்படுத்தினர்.

வட்டெழுத்துக்கள் பிராமி எழுத்து முறையில் இருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. பிராமி எழுத்துக்களை ஓலைச் சுவடிகளில் எழுதுவதற்கிணங்க அதை மாற்றியதால் வட்டெழுத்து தோன்றியது எனப் பொதுவாகக் கருதப்படுகிறது.

பிராமி எழுத்துக்கள் கோடுகளாக இருப்பதால் (கோடுகளை ஓலைச் சுவடியில் எழுதினால் அவை கிழிந்து விடும்) ஓலைச் சுவடியில் எழுதும் பொருட்டு அவற்றை வட்ட வடிவில் மாற்றி எழுதப்பட்டதால் வுட்டெழுத்து உருவானதாகக் கருதலாம்.


**வட்டெழுத்துக்கள் பிராமி எழுத்து முறையில் இருந்து தோன்றியதாக கருதப்படுகிறது. ஓலைச் சுவடியில் எழுதும் பொருட்டு அவற்றை வட்டவடிவில் மாற்றி எழுதப்பட்டதால் வட்டெழுத்து உருவானதாகக் கருதலாம்.**

ஆனால் சிலர் வட்டெழுத்தே தமிழரின் பழங்கால எழுத்துமுறையென்றும் அதிலிருந்தே தமிழ் பிராமி எழுத்துக்கள் தோன்றியன என்றும் வாதிடுகின்றனர். மு.வரதராசனார் தன்னுடைய தமிழ் இலக்கிய வரலாறு என்னும் நூலில் வட்டெழுத்தே தமிழரின் பழங்கால எழுத்து முறை என்றும் வடபிராமி தென் பிராமியாக திரிபுற்றது வட்டெழுத்தை ஒட்டி வளர்ந்த வளர்ச்சியே காரணம் என்றும் கூறியுள்ளார்.


2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வலம்புரி பத்திரிகை தனது 22 ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் முகமாக தனது பத்திரிகையை சிறப்பு மலராக வெளியிட்டு இருந்தது. அதில் வெளிவந்த வாழ்த்துகள் சிலவற்றை எமது பண்டைய எழுத்துக்களான தமிழி மற்றும் வட்டெழுத்துக்களில் எழுதியிருந்தால் எப்படியிருந்திருக்கும் என்பதைப் பார்ப்போம்.

**2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வலம்புரி பத்திரிகை தனது 22 ஆம் ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் முகமாக தனது பத்திரிகையை சிறப்பு மலராக வெளியிட்டு இருந்தது. அதில் வெளிவந்த வாழ்த்துகள் சிலவற்றை எமது பண்டைய எழுத்துக்களான தமிழி மற்றும் வட்டெழுத்துக்களில் எழுதியிருந்தால் எப்படியிருந்திருக்கும் என்பது இங்கு காட்டப்பட்டுள்ளது.**


வலம்புரி வாசகர் மத்தியில் அசைக்கமுடியாத
இடத்தைப் பெற்று வெற்றி நடைபோடுகிறது




அத்வைத தத்துவத்துக்கமைய மக்களை வழிப்படுத்தும்
அரும்பணியை வலம்புரி ஆற்றுகிறது




தரம் மிக்க ஆசிரியர் தலைபங்கம்
வலம்புரியின் வெற்றிக்கு காரணமாகியபது




சைவசமயத்தை அரணாக நின்று
காத்துவரும் வலம்புரி




தமிழ்ப் பத்திரிகை வரலாற்றில் வலம்புரிப் பத்திரிகை
தனித்துவமான அடையாளத்துடன் விளங்குகிறது



வலம்புரி வாசகர் மத்தியில் அசைக்கமுடியாத
இடத்தைப் பெற்று வெற்றி நடைபோடுகிறது




ஆனால் இந்த வாதம் பலரால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. கி.பி.8 ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து கிரந்த எழுத்துக்களுடன் மணிப்பிரவாளத்தை எழுதப் பயன்படுத்தப்பட்டது. கி.பி.11 ஆம் நூற்றாண்டுகளில் வட்டெழுத்து தமிழ் நாட்டில் வழக்கொழிந்து. தற்கால தமிழ் எழுத்துக்களை ஒத்த எழுத்து முறை பயன்படுத்தப்பட துவங்கப்பட்டது. ஆனால் கேரளத்தில் 15 ஆம் நூற்றாண்டு வரை வட்டெழுத்து மலையாளத்தில் எழுதப் பயன்படுத்தப்பட்டது.




தமிழ் வட்டெழுத்துக்கள்
[illegible] தொல்லியல் அருங்காட்சியகம்
(நன்றி விக்கிப்பீடியா)

அகர முதலெழுத் தெல்லாம்
ஆதி பகவன் முதற்றே யுலகு
— குறள்



வட்டெழுத்தில் குறள்

### தமிழ் வட்டெழுத்து உயிரெழுத்துக்கள்



அ ஆ இ ஈ உ
ஊ எ ஏ ஐ
ஒ ஓ


ஔ ஃ
ஆகியவற்றுக்கு
வட்டெழுத்துகள்
இல்லை

### தமிழ் வட்டெழுத்து - மெய் எழுத்துக்கள்



க் ங் ச் ஞ் ட்
ண் த் ந் ப் ம்
ய் ர் ல் வ் ழ்
ள் ற் ன்

### தமிழ் வட்டெழுத்து உயிர் மெய் எழுத்து



க கா கி கீ
கு கூ கெ கே
கை கொ கோ

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 18 பேர்...

மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,962 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## வருடாந்தம்...

முகப்படுத்தப்பட்டுள்ளது.

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையினால் இந்த வரி சூத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அந்த சூத்திரம் அமைச்சரவை அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாக அதன் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டில் பொருளாதாரத்திற்குத் தாக்கத்தை ஏற்படுத்தாத வகையில் சிகரெட்டின் பாவனையைக் கட்டுப்படுத்துவதற்காக உரிய முறைமைக்கு சிகரெட்டின் விலையை அதிகரிப்பதே இந்த வரி சூத்திரத்தின் நோக்கமாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம)

## 6 குடும்பங்...

யாழ்ப்பாணம் - நயினாதீவு வடக்கு பகுதியில் நேற்று மாலை வீசிய மினி சூறாவளி தாக்கத்தினால் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 14 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என்.சூரியராஜ் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றுக் காலையிலிருந்து மழையுடன் கூடிய காலநிலை நிலவிய நிலையில் நேற்று மாலை வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நயினாதீவு வடக்கு ஜே 35 கிராம சேவகர் பிரிவில் வீசிய மினி சூறாவளியின் தாக்கத்தினால் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-18,33)

## சாவகச்சேரியில்...

கிழமை அவரது வீட்டில் உயிரிழந்துள்ளார்.

கொரோனாத் தொற்று ஏற்பட்ட நிலையில் வீட்டில் தனிமைப்படுத்தலில் இருந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

முதியவரது சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில்சுகாதார முறைப்படிதகனம்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-30)

## நீதிபதி...

களுக்கு 2022 ஜனவரி 5ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான வழமையான இடமாற்ற நடைமுறையின் கீழ் இந்த இடமாற்றம் தலைமை நீதியரசரினால் வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர், திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன், வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி டெனிஸ் சாந்தன் சூசைதாஸன், திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இராமநாதன் கண்ணன், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார்.

திருகோணமலை குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதி விநாயகமூர்த்தி இராமக்கமலன், மட்டக்களப்பு குடியியல் மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக இடமாற்றப்பட்டுள்ளார். (ம-18,33)

## பொருட்களின்...

நத்தார் கொண்டாட்டங்களுக்கு முன்னர் எரிபொருள் விலையினை அதிகரித்து அதனை நத்தார் பரிசாக பொதுமக்களுக்கு அரசாங்கம் வழங்கியிருந்தது.

அதேநேரம், நாளை (இன்று) முதல் பால்மாவின் விலையினை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதுவே நாட்டின் தாய்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் அரசாங்கம் வழங்கும் புத்தாண்டு பரிசாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

## இந்தியா...

தாக வருட இறுதி விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின்போது உணவு, சுகாதார பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் செலாவணி ஸ்திரத்தன்மை ஆகிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் ருவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## வடக்கு - கிழக்கு...

விஜித் விஜயமுனி சொய்சா சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகிய இரு அமெரிக்கர்களும் இணைந்துதான் நாட்டை நிர்வகிக்கின்றார்கள்.

மாறாக பிரதமரிடம் பெருமளவிற்கு அதிகாரங்கள் இருப்பதுபோல் தெரியவில்லை. அதனால்தான் அவர் திருப்பதிக்குச் சென்று வந்தாரோ தெரியவில்லை.

இப்போது நாடளாவிய ரீதியில் பெறுமதிவாய்ந்த பல்வேறு இடங்களும் சொத்துக்களும் வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதுடன் கொழும்பில் முக்கியமான 19 இடங்களை விற்பனை செய்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்பின்னர் ஜனாதிபதி மாளிகை, அலரிமாளிகை மற்றும் பாராளுமன்றம் ஆகிய மூன்றுமே நாட்டில் எஞ்சியிருக்கும்.

இதேவேளை பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டிருக்கின்றது.

பால்மா மாத்திரமன்றி அனைத்து அத்தியாவசியப் பொருட்களினதும் விலைகள் பெருமளவால் அதிகரிக்கப்பட்டிருப்பதுடன் அவற்றில் பலவற்றுக்கு சந்தையில் தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கின்றது.

முன்னர் வெளிநாடுகளால் வழங்கப்படும் நிதியுதவிகள், பாரிய அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி ஆகியவற்றிலேயே மோசடி செய்தார்கள்.

எனினும் தற்போது அவை இல்லாத காரணத்தினால் ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய மக்களின் வயிற்றில் அடித்து, அதனூடாகவே அவர்கள் சம்பாதிக்கின்றார்கள்.

சிறுநீரக நோய்கள் ஏற்படுவதைத் தடுப்பதற்காக இரசாயன உர இறக்குமதியை நிறுத்துவதாகக் கூறினார்கள்.

ஆனால் இப்போது உண்பதற்கு உணவின்றி உயிரிழக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

இவ்வாறான தொரு பின்னணியில் இன்னும் இரு வருடங்கள் தற்போதைய அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பிலிருந்தால், மக்களின் குருதியை எடுத்து விற்பனை செய்வதற்குக்கூட அது தயங்காது.

ஆகவே இந்த அரசாங்கத்தைப் பதவி கவிழ்ப்பதற்கு நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணையவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதில் அரசாங்கத்திற்கு நெருக்கமானவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டிருப்பதுடன் இராணுவத் தலையீடும் அதிகரித்துள்ளது.

எனவே இவற்றை சீர்செய்வதுடன் தேர்தல்முறை மாற்றத்துடன் தேர்தலொன்றுக்குச் செல்லவேண்டும் என்றார். (ம)

## மத்திய வங்கி...

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 825 பில்லியன் ரூபாய் அச்சிடப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் இலங்கை மத்திய வங்கி 48.5 பில்லியன் ரூபாய் பெறுமதியான முறிகளை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அதில் 33.5 பில்லியன் பெறுமதியான முறிகளையே விற்பனை செய்ய முடிந்துள்ளது.

வட்டி விகிதம் மற்றும் நாணயமாற்று விகிதத்தை தொடர்ந்தும் கட்டுப்படுத்துவதன் மூலம் நெருக்கடி மேலும் தீவிரமடைந்து வருவதாக மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் கலாநிதி W.A. விஜேவர்தன தெரிவித்துள்ளார். (ம)

தன நிதானய
திகதி - 2021.12.30
சீட்டிழுப்பு இலக்கம் - 662
W 16 56 72 80
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 30.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2927
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 27 41 61 69
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/12/30
சீட்டிழுப்பு இலக்கம் 4632
ஆங்கில எழுத்து Y
வெல்லப்பட்ட இலக்கங்கள் 9 3 2 1 3 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 30/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0980
வெற்றி எழுத்து O | சுப்பர் இலக்க 26
வெற்றி இலக்கங்கள் 29 36 45 76

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 30/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1191
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 1 2 0 1 0 2
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1435
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 30.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,512,240
வெற்றி இலக்கங்கள் 05 23 34 64
ஆங்கில எழுத்து T
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3770
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 30.12.2021
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,781,040
வெற்றி இலக்கங்கள் 20 38 65 68
ஆங்கில எழுத்து L
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

සංවර්ධන වාසනාව
அபிவிருத்தி அதிர்ஷ்டம்
திகதி : 2021-12-30
வெற்றி வாரம் : 472 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ.12,101,360/-
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 24 67 42
4
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ.2,766,440/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.12,212,208/-
அபிவிருத்தி லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1609
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 30.12.2021
தினம் வியாழன்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
B 15 36 43 73
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 52,095,825/=
அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,635,885/=
திகதி 30.12.2021
வெற்றி வாரம் 3321
வர்ணம் கபில நிறம்
வெற்றி இலக்கங்கள் 17 29 48 53
மிதுனம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,305,200/=

12 வாசனா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 33 15 51 60 63
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 200,166,775/-
சீட்டிழுப்பு வாரம் 785
வர்ணம் செம்மஞ்சள்
திகதி 2021.12.30
வியாழக்கிழமை
பவர் ப்லே பல
பவர் ப்லே இலக்கம் 83560
தொலை பேசி : 011-2333546-47

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபுகஸ்கந்த மீண்டும் மூடப்படுகின்றது மண்ணெண்ணெய்க்கு தட்டுப்பாடு வரலாம்

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஜனவரி 3 ஆம் திகதி முதல் ஜனவரி 30 ஆம் திகதி வரை மூடப்படும் என வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

சுத்திகரிப்பு நிலையத்தை பராமரிக்க தேவையான மசகு எண்ணெய் இதுவரை கிடைக்காத காரணத்தினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் தற்போது நில வும் அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக இந்த சுத்திகரிப்பு நிலையத்தின் செயற்பாட்டிற்கு தேவையான மசகு எண்ணெய் கொள் வனவு பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டுக்குத் தேவையான மண்ணெண்ணெய், விமான எரிபொருள் என்பன சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

இதன் காரணமாக எதிர்வரும் நாட்களில் நாடளாவிய ரீதியில் மண்ணெண்ணெய்க்கு பாரியளவில் கடும் தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம)

# முன்னாள் ஜனாதிபதி மைத்திரி சீன தூதுவருடன் சந்திப்பு



(கொழும்பு)

இலங்கைக்கான சீன தூதுவர் கீ சென்ஹொங் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

நேற்று வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது முன்னாள் ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்த சீன தூதுவர், சீன கம்யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துக்களையும் தெரிவித்தார். (ம)

# மத்திய வங்கியின் கையிருப்பு எவ்வாறு திடீரென அதிகரித்தது

## ஹர்ஷ டி சில்வா கேள்வி

மத்திய வங்கியின் கையிருப்பு அதிகரிப்பதற்கு அரசாங்கத்துக்கு டொலர் எந்த அடிப்படையில் கிடைக்கப்பெற்றது என்பதை அரசாங்கம் வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா கேள்வி எழுப்பினார்.

மத்திய வங்கியின் கையிருப்பு 3.1பில்லியன் டொலர்களாக உயர்வடைந்திருப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் அறிவித்துள்ளார்.

அப்படியாயின் அந்த நிதி எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள் என்றவகையில் எமக்கு தெரியப்படுத்த அவர்கள் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

ஆனால் இந்த பணம் எவ்வாறு கிடைக்கப்பெற்றது என்ற விடயத்தை மறைப்பதற்கு முயற்சிக்கின்றனர். எதற்காக மறைக்க வேண்டும் என கேட்கின்றேன். உண்மையில் மத்திய வங்கி தெரிவிப்பதுபோல் பணம் கிடைத்திருந்தால் அதனை எங்கிருந்துகிடைக்கப்பெற்றது என்பதை பகிரங்கமாக தெரிவிக்கமுடியும் என்றார். (ம)

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமைக்கு சுதந்திரக் கட்சியே தடை

## பைசர் முஸ்தபா தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்காக தமிழ் பேசும் கட்சிகளின் ஒன்றிணைந்த முயற்சிகளுக்கு எதிராக ஸ்ரீலங்காவின் ஆளும் அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியொன்று கருத்து வெளியிட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைக்க வேண்டும் என்ற தமிழ் அரசியல் கட்சிகளின் கோரிக்கைக்கு, முஸ்லிம் அரசியல் கட்சிகள் ஆதரவளிக்கக் கூடாது என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பைசர் முஸ்தபா தனது இல்லத்தில் ஊடக சந்திப்பு ஒன்றை நடத்தியதோடு, தமிழ் பேசும் கட்சிகளின் சந்திப்பு குறித்தும் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் இணைந்து தீர்மானங்களை மேற்கொள்வது மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களை விட சுமந்திரன், சாணக்கியன் போன்ற தமிழ் உறுப்பினர்களும் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகள் குறித்து பேசுவதை தான் பாராட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், வடக்கு, கிழக்கை இணைப்பதற்கான ஆதரவை தமிழ் கட்சிகள் கோரினாலும் அதற்கு இடமளிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் பேசும் கட்சிகளின் சந்திப்பின் பின்னர் உருவாக்கப்பட்ட ஆவணத்தில் வடக்கு, கிழக்கு இணைப்பு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளதால் முஸ்லிம் கட்சிகள் கையெழுத்திட மறுத்துவிட்டதாக தனக்கு தகவல் கிடைத்ததாக ஸ்ரீலங்காவின் முன்னாள் அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார். (ம)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (9289)
076 825 7716 (ஆகாஸ்)

வீடு விற்பனைக்கு
இல.17/10 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்திருக்கும் வீடும் வளவும் (கல்வீடு 2 3/4 பரப்பு) உடன் விற்பனைக்கு உண்டு.
ஆர்வமுள்ளோர் எதிர்வரும் 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை நேரில் பார்வையிட்டு பேசலாம்.
குறிப்பு:- நாவலர் சந்தியிலிருந்து பிறவுண் வீதியை நோக்கி 50m தொலைவிலுள்ள இடது பக்கத்தில் அமைந்துள்ள ஒழுங்கை முகப்பில் வீட்டின் இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. (9335) உரிமையாளர்



பல ஆயிரம் கடந்த பதிவுகள்
பல நூற்றுக்கு மேற்பட்ட திருமணங்களை நிறைவேற்றிய சாதனை
உங்கள் கல்யாணி மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
உலகின் எப்பாகத்திலிருந்தும் தொடர்புகொள்ள
www.kalyanamalai.lk
இணையத்தளத்தைப் பாருங்கள்
அதிகரித்துவரும் நிலைய நிர்வாக செலவிற்காக
பதிவுக்கட்டணம் ரூபாய் 1500/-
சேவைக்கட்டணம் 500 /-



தொடர்பு – கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P : 021 720 1005
Email : Kalyanamalai.jaffna@gmail.com

வீட்டுப் பணிப்பெண் தேவை
தங்கி நின்று வயோதிபரை பராமரிக்கக் கூடியவர்கள் நேரில் வரவும்.
இல.51, அம்மன் வீதி, நல்லூர். (9306)
077 773 3368

வேலையாட்கள் தேவை
யாழ்ப்பாண Town இல் உள்ள மொத்த மற்றும் சில்லறை வியாபார பான்சி கடைக்கு வேலையாட்கள் (ஆண்/பெண்) தேவை.
(யாழ். மாநகர எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.) (9337)
077 468 3354

விற்பனைக்கு
சுப்பர்மாக்கற்களுக்கு மற்றும் பலசரக்கு வியாபாரங்களுக்கு உபயோகிக்கக்கூடிய பாவித்த றாக்கைகள், தளபாடங்கள் விற்பனைக்கு உண்டு. (9317)
077 471 1312

வேலை வாய்ப்பு
வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel And Indian Restaurant இற்கான வேலை வாய்ப்பு. (9297)
076 830 3931

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-3286)
0768226240 DHL

வெளிநாட்டு கற்கைநெறிகள் வேலைவாய்ப்புக்கள்
கனடா / UK / சிங்கப்பூர் / மலேசியா ஆகிய நாடுகளில் CARE GIVER (முதியோர் - சிறுவர் - நோயாளர் பராமரிப்பு) COOK / HOTEL MANAGEMENT துறைகளில் வேலை வாய்ப்புக்களும் அதற்கான கற்கை நெறிகளும்
ஆரம்பம் - 15-01-2022 / உடனடி அனுமதிகள் (C-3372)
IELTS Life Skills B1
வெளிநாடு செல்வதற்கான ஆங்கிலம் அடிப்படையிலிருந்து
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
0777-068-777

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.